புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

# இந்துசாதனம்

(1889)

# THE HINDU ORGAN

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவைகேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

| பத்திரக் கிரயம். | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு ரூ. | 5-00 |
| இலங்கை, இந்தியா: " ரூ. | 8-00 |
| தொலைவாய்ப்பகுதி: " ரூ. | 9.00 |
| தனிப்பிரதி: சதம் | 5 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

| விளம்பர விகிதம். | |
|---|---|
| முதன்முறைக்கு:—ஒருகலம் | ரூ. 9-00 |
| " அரைக்கலம் | ரூ. 4-50 |
| " கால்கலம் | ரூ. 3-00 |

அடுத்த முறைகட்கு வெ விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினாலன்றிக் கவனிக்கப்படா

புத்தகம்—சஉ. } யாழ்ப்பாணம்;-பிரமோதூதவரு ஆடிமீ கசுஉ, (1930 ஜூலாய் 31) வியாழக்கிழமை. { இலக்கம்—சூ.

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவவிலை பரரோர் தாங்கப்
பேர்பூத்த சௌனகத் தினிது வாங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றோது
மதம்பூத்தவிநாயகன்றுள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

---

## ஸ்ரீ கதிர்காமம் கதிரமலைத் தண்ணீர்ப்பந்தர்த் திருப்பணித் தர்ம இயல்பு.

கதிரைமலை சுமேலைஷிலுள்ள முத்து மாணிக்க விநாயகப் பெருமான் உத்தரவு பெற்று வருஷா வருஷம் பக்தகோடி அடியார்கள் பொருளுதவியால் நடத்தேறிவருகிற ஷெ தண்ணீர்ப்பந்தல் மேன்மேலும் நடத்தேறி வருவதற்குப் பெரும் பொருள் வேண்டும்.

கனதனவான்களாகிய சகல புண்ணிய சீலர்களும் தங்கள் தங்களால் இயன்றளவு உதவும் பணம் அனுப்பும் விபரம்:—

யாழ்ப்பாணம் தீவுப்பற்று மணியம் வேலணை ஸ்ரீ மு. சோமசுந்தரம்பிள்ளை அவர்களிடம அனுப்பவும்.

முத்துமாணிக்க வேல்சாமி சீடனுகிய
சி. வீரவாகுப்பிள்ளை குமாரன்
வீ. ஆ. துரைசுவாமிப் பரதேசியார்,
கதிரமலை.

(Y. 66. 31-12-30.)

---

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி.

வங்கிக்காரர்

1918-ம்ஆ ஸ்தாபிதமானது — மூலநிதி 8 லட்சம் ரூபா..
இதுவரையிற் சேர்ப்பட்ட பங்குப்பணம் ரூபா 1,64,706
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

### பங்குப்பணங் சட்டுமுறை.

பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது குறித்தகாலமுடிவில் பங்கொன்றுக்கு ரூ. 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்நேரமும் வாங்கலாம்.

### தினசரிப் பற்றுவரவு.

எச்சமதி சராசரி 500 ரூபாவிற்குக் குறையாமல் இருக்குமானல் 3 விகித வட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாம்.

### தவணைவரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்கப்படும் வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

### உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும், "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொலைவாய்ராச்சியப்பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
**இந்தியகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.**

### கடன்

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறும் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும் ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக் கொடுக்கலாம்.

காணி, தானியங்கள், சில முதலாம் பழுதுபடாத பொருள்களையும் ஈடாகவைத்துக் கொண்டு தக்க பிணையுடன் கடன் எடுக்கலாம் (இக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.)

இன்னும் வேண்டிய விபரங்களை மானேசர் மூலமாக அறிந்துகொள்ளலாம்.

(Y. 72. 21-8-30.)

---

## இன்னும் முதன்மை ஸ்தானமே!

கோவுத் தைலங்களென்று சொல்லி "டஜன்" கணக்காய்க் கேள்விப்படுகிறீர்கள். ஆனல் கோவைத் தீர்ப்பதிற் சிறந்தது என்று சொல்லக் கூடியது.

## லிட்டில் ஓரியென்டல் பாம்

தைலம்தான்.

43வருடங்களாய் உண்மையான அனுபோகத்தில் உசிதமாய் நின்று தலைவலி, நரம்புவலி, கீல்வாய்வு, துடைப்பிடிப்பு, வாதம், சுளுக்கு தொண்டைநோ, நெஞ்சுச்சளி முதலியவைகளுக்கு
நிச்சயமான
சுறுக்கான
தீங்கில்லாத
தைலம்
என்று ரூபிக்கப்பெற்றது.

எல்லா ஷாப்புகளிலுங் கிடைக்கும்

(4—28) Little's Oriental Balm and Pharmaceutics Ltd., Madras

(Y. 51 31-12-30)

---

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போதுஇந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாரூ, சாலாமூஸ்லி, சப்பேமூஸ்லி, பிஸ்தாரை, சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளப்பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனுல் சீதபிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, இருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை முத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைமுத்தலுக்கு ரூபா க0. கால் முத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொலைவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினுல் முன்பணம் ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
சிலோன்.

(Y.75. 31-12-30.)

---

## The "New Lanka" Roadster Chromium Plated Bicycle.

கவனிக்கத்தகுந்த குறிப்புகள்.




1. கைபிடிக்கம்பி குரோமியம் பூசப்பட்டது
2. ஆசனத்தின் வில்லுக்களும் குரோமியம் பூசப்பட்டது.
3. சட்டம் உறுதியாய் இணைத்த உருக்கு.
4. சேலுதாங்கி மிகவும் கனமானது.
5. பிறேக்குகள் திருத்தமான முறையாக உள்ளன.
6. வளையங்களும் குரோமியம் பூசப்பட்டவை.
7. கம்பிகள் செருப்புக்குஉருகக்கூடாத பளிங்குப்பூச்சுப் பூசப்பட்டவை.
8. சங்கிலி "ஹான்ஸ் றிநோல்ட்" கம்பனியினுடையது.
9. சில்லுக்குடங்கள் மிக்ககனதியான 1¼ இஞ்சு பிரமாணமான குண்டுகளைக் கொண்டவை
10. சில்லுத்தாங்கி முட்டைவளைவுள்ளதும், குரோமியம் பூசப்பட்டதுமாய்த்திருத்தமான முறையாகவும் உள்ளது.

## கைவிலைக்கு ரூபா 75.

அல்லது

தவணையிலே முதல் மாசம் 10 ரூபாயும், பின்னர் 10 மாசங்களுக்கு மாசந்தோறும் 7 ரூபா 16 சதமும்.

**SUB-AGENTS:—**

M A Sinna Lebbe Bros., Batticaloa
T N Lingam, Vannarponnai, Jaffna
R M C de Silva, Main Street, Ambalangoda.
Jayanoris Silva & Sugathadasa, Trincomalee.
National Drapery Stores, Anuradhapura
L N de Silva, Matara.

*SOLE AGENTS:*

**Colombo Stores Ltd.**

P. O. BOX 197. —— COLOMBO.

(Y. 74. 19 6 30 to 18 12 30)

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: பிரமோதூத ஆடி மீ ௧௬ உ வியாழக்கிழமை.


## குருவில்லா வித்தை.

நமது தாய்மொழியாகிய தமிழ்மொழி காலத்துக்குக் காலம் கற்பாரின்றிக் குன்றத் தொடங்கிவிட்ட தென்பதை எவரும் அங்கீகரிப்பர். இங்ஙனம் இது குன்றிவருதற்கான காரணங்கள் பல வுளவெனலாம். பூர்வத்தில் தமிழ்ச்சங்கத்தினராலும் பின்னர்ச் சேரசோழபாண்டியராகிய தென்னாட்டு வேந்தர் மூவராலும் இம்மொழி வளர்க்கப்பட்டு வந்தது. யாழ்ப்பாணத்திலும் தமிழ்மன்னர் இக்நாட்டை பரிபாலித்த காலத்திலே தமிழ் விருத்தியடைந்தது. யாழ்ப்பாணம் போத்துக்கேசர் ஒல்லாந்தர் என்னும் அந்நிய அரசர் கைப்பட்டிருந்தகாலத்திலும் தமிழ்க்கல்வி விருத்திக்கு அந்த அந்நிய அரசினர் ஏதும் இடையூறு விளைத்தனரெனச் சொல்வதற்கு ஆதாரமில்லையாம். யாழ்ப்பாணத்துப் புலவருட் பலர் அக்காலத்தும் விளங்கியுள்ளனர். நமது ஆங்கிலேயர் பரிபாலனம் இந்நாட்டிற் றொடங்கியபின்னரே, தமிழ்மொழியும் குன்றத் தலைப்பட்டதெனலாம். ஆங்கில அரசினர் இம்மொழியை யலட்சியஞ் செய்து தம் பாஷையையே அரசியல் விவகாரங்களை நடாத்துவதற்கான பாஷையாக நியமித்தனர். ஆயினும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள்போன்ற தமிழறிஞர் உதித்து இத்தமிழ்மொழியை இயன்றவரை விருத்தி செய்து இம்மொழி இந்நாட்டில் நிலவிவரச் செய்தனர். அரசினர்பொருட்டு இங்குள்ளார்க்குக் கல்வியூட்டும் பொறுப்பை வகித்த பாதிரிமார் நஞ்செந்தமிழை விபரீதப்படுத்தி இங்குள்ள சிறுவர்கட்குப் பயிற்றிவரலாயினர். இப்பாதிரிமார் ஆரம்பக்கல்வியளவோடு நின்றுவிட்டமையினால் தமிழை மேலும் மேலும் படிக்க வேண்டுமென்னும் நோக்கங்கொண்டோர் பலர் தக்க தமிழ்வித்துவான்களை யடைந்து ஆசிரியன் மாணாக்கர் என்ற முறைப்படி தமிழைக் கற்றுவந்தனர். அங்ஙனங் கற்ற தமிழ்வித்துவான்களும் புலவர்களும் ஆசிரியர்களும் இக்காலத்தில்லாராக, தமிழைப் பாதிரிமார் பள்ளிக்கூடங்களிற் கற்றவர்களும் ஆங்கில முறையிற் கற்றவர்களும் எழுத வாசிக்கப் பயின்றபின் ஆசிரியரின்றித் தாமே புத்தகங்களை யெடுத்துப் படித்துப் பயின்றவர்களுமானவர் பலர் தோற்றுவாராயினர். இவர்களுடைய கல்வி அஸ்திபாரமற்றதும் முறையற்றதும் விபரீத விளக்கத்தோடு கூடியதுமாய்த் தமிழ் விருத்திக்கு இடையூறாக மாறியது. பலகாலமாக ஒரு ஆசிரியனை யடைந்து மாணாக்க இலக்கணத்தோடு அந்த ஆசிரியனிடங் கற்கவேண்டிய இலக்கண இலக்கியங்களையும் புராணேதிகாசங்களையும் சமய சாஸ்திரங்களையும் இன்ன பிறவற்றையும், இக்காலத்துள்ளார் அங்ஙனஞ் செய்தலை விடுத்து அச்சிடப்பட்ட உரைநூல்களையும் வசன நூல்களையும் வாங்கிப் படித்துவிட்டு, "குருவில்லாவித்தை பாழ்" என்றபிரகாரம் ஆசிரியனில்லாக் கல்வியானதினால் விபரீத விளக்கங்கொண்டு விபரீதம் பேசவும் எழுதவும் தலைப்பட்டுவிட்டனர்.

இப்பொழுது அரசினர் தம் பாடசாலைகளிலும் தாம் நன்கொடைப்பண முதவும் பாடசாலைகளிலும் ஊட்டும் தமிழும் இந்த விபரீதக் கல்விக்குப் பெருந் துணையாக நிற்கின்றது. நிரம்பாக் கல்வியையும் குருவில்லா வித்தையையும் பயின்ற இவர்களே நூல்களிற் பிழைகாண்பாரும், சாஸ்திரங்களிற் சந்தேகப்படுவாரும், பழைய புலவருட் குற்றந்தேடுவாருமாயினர். இவ்விபரீத கல்வி யுடையார்க்கு அற்ப ஆங்கிலக்கல்வியும் பயின்றவர்களானபட்சத்தில் விபரீதம் இன்னும் அதிகமாகத் தலைப்பட்டுக்கொள்ளும். நிரம்பிய ஆங்கிலக் கல்வியும் தமிழ்க்கல்வியு முடையாருள்ளார் எக்காலத்தும் உண்மையான வித்துவான்களாகவே காணப்படுவர். ஆரியந் திராவிடம் ஆங்கிலம் என்னும் முப்பாஷையையும் பயின்றோர் சிலர் தென்னாட்டிலுஞ் இந்த யாழ்ப்பாணத்திலும் தக்க வித்துவான்களாகவே விளங்கினர். இப்படியான கல்விமான்கள் தாய்மொழியாகிய தமிழ்மொழியின்பொருட்டுப் பெரிதும் உழைத்துள்ளனர்.

நாம் மேற்காட்டிய விபரீதக் கல்வியுடையார் மூலமாகவும் அரசினர் இப்பொழுது வித்தியாசாலைகளிற் பயிற்றுந் தமிழ்மூலமாகவும் யாழ்ப்பாணத்திலுள்ள தமிழும் காலகதியிற் செட்டுப்போமென்றே சொல்லவேண்டியிருக்கின்றது. நம் செந்தமிழ்ப் பாஷை மாத்திரமல்ல, நாம் கைக்கொண்டொழுகும் சமயக்கோட்பாடு, நமது ஆசாரவொழுக்கம், தொன்மை முதலியனவைகளெல்லாம் காலகதியிற் செட்டுவிடுமெனச் சொல்லுதலும் மிகையாகாது.

உண்மையான தமிழபிமானிகள் இத்தீமைகள் நேராவண்ணஞ் செய்யத்தக்கது யாதெனில் தமிழைத் தொன்மைபோல் ஆசிரியமாணாக்கர் முறையாக, இப்பொழுதுள்ள அரசினர் நிபந்தனைகள் யாதுமின்றி, நஞ் சிறுவர் சிறுமியர்க்குப் பயிற்றுவதற்கான மார்க்கங்களைத் தேடுதல் வேண்டும். இது ஒருவர் இருவர் இன்றேல் சிலர் மாத்திரஞ் சேர்ந்து செய்யத்தக்கதுமல்ல, நினைத்த மாத்திரத்தேசெய்யத்தக்கதுமல்ல. தமிழ்மக்களாயுள்ளாருட் பலர் இதனைச் சிந்தித்து முயற்சிசெய்து காலகதியில் நிறைவேறச் செய்யவேண்டியதாம்.

## உலகம் பலவிதம்.

கச்சியப்பசிவாசாரியர் போலிப் புலவரென்றும் கந்தபுராணத்திற் காமச்சுவை பயக்கும் பாடல்களுண்டென்றும் இந்தக் கச்சியப்பர் வலிந்து காமமயக்கப் பாடல்களை நூலிற் பாடிவைத்துத் தமிழரை மயக்கத்துளமிழ்த்திவிடுவது எவ்வளவு மடமையென்றும் இராமு எழுதியவைதையும பரிபாலினிப்பத்திராதிபர் இவற்றை ஏற்றுப் பிரசுரித்ததையும் இவ்வளவோடமையாது தம் பத்திரிகையின் பிந்திய பிரசுரங்களில் இராமுவும் பத்திராதிபரும் பரஸ்பரம் துணையாக வெளிப்பட்டுத் தாங்கள் செய்த அபராதங்கட்குச் சமதானம் எழுத முயன்றதையும் இற்றைவரையில் அப்பத்திராதிபர் தான் பிடித்தது சரியெனத்தாபிக்க முயல்வதையும் அபிமானிகள் அறிவர் இவைமாத்திரமல்லாமல், சோதிட நூலையும் கந்தபுராணம் முதலாம் புராணங்களையும் ஏனைய இலக்கண இலக்கியங்களையும் நன்கு பயின்ற அறிஞர் முற்காலத்திலிருந்தார்கள்; இப்பொழுதும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கந்தபுராணம் சோதிட நூலோடு மாறுபடுகின்றதென்று இப்புராணத்தைக் கண்டித்தாருமல்லர். இப்பொழுது பரிபாலினிப் பத்திராதிபருக்கே சோதிடத்திற்கும் கந்தபுராணத்திற்கும் பெருமுரண்புலப்படுகின்றது.

* * *

"தாமெழுதிய கிரகங்களைப் பிரமாணத்தோடு மறுக்கமுடியாத சாதனப்பத்திராசிரியர் ..................... பசப்புரைகளை நிரப்பியிருக்கின்றாரேயன்றி ஒன்றையாவது விளக்கினாரல்லர்" என்று பரிபாலினிப்பத்திராதிபர் தமக்குத் தாமே வெற்றியுஞ் சொல்லிக்கொள்ளுகிறார். தமது பத்திரிகையின் முந்திய பிரசுரங்களிற் புலவரை இருவகுப்பாய் வகுத்த இவர் இப்பொழுது தமிழ் நூல்களையும் இருபகுப்பாக வகுக்கத்தலைப்பட்டார் சித்திரையாகக்கிடப்பவனை எழுப்புதல் முடியுமேயன்றி சித்திரைபோலக் கிடப்பவனை யெழுப்புதல் முடியாதவாறு, விளங்கியும் விளங்கார்போல் நடித்துப் பிடிவாதஞ்செய்யும் இவருக்கு விளக்குமாறெவ்வாறோவென்பது புலப்படவில்லை. கந்தபுராணம் மாறுபாடுடையது கச்சியப்பர்போலிப்புலவர் அவர் சரித்திரத்தைத் தாமிட்ட கந்தபுராணப் பதிப்பிலெழுதிய நாவலரவர்கள் கூற்றுப் பிழையாகின்றது என்று ஆன்றோரையுஞ் சான்றோரையுந் தொன்னூல்களையுமகிக்கும் இவருக்குப் பிரமாணங் காட்டுவது எவ்வாறோ மேலும் "ஆதலின் இவர்க்கு (இந்துசாதனபத்திராசிரியருக்குப்) பதில் எழுதுவது அவசியமன்றாயினும் பொதுசனங்கள் உண்மையை உணரும்படி இதனை எழுதுகிறோம்" என்று சாதனப் பத்திராசிரியரை விலக்கிவிட்டுப் பொதுசனங்களுக்குச் சமாதானஞ் சொல்லப் பத்திராசிரியர் போகிறார். இவர் எங்கே போனாலும் இவர்செய்த புராண நிந்தை பெரியோர் நிந்தைகள் காரணமாக வந்த பழி இவரைத் தொடர்வதுபோல் இந்து சாதனபத்திராசிரியரும் ஏனைய கற்றோரும் பொதுசனங்களும் இவரை விடப்போவதில்லை. இவருடைய துராட்சேபங்கட்கெல்லாம கண்டனங்களும் சமாதானங்களும் பல அறிவாளிகள் அபிமானிகளால் எழுதி இங்கே அனுப்பப்பட்டிருந்தலின், அவற்றை முறையாக இப்பத்திரத்தில் வெளியிடவேண்டியிருந்ததலின், அங்ஙனம்வெளியிடுங்கால் அவையே இவர் கூற்றிற்கு விடையாக அமையுமாதலின் இந்துசாதனப்பத்திராசிரியர் கூறியது கூறலாகப் பின்முடியுமெனவெண்ணி இப்பொழுது இவர் சமாதானமெழுதாதொழிந்தாரன்றி நியாயந்தெரியாமலும் பிரமாணங்கிடையாமலும் விடுத்தாரல்லரென்பதைப் பாலினிப்பத்திராதிபர் அறிவாராக சோதிடத்திற்குமாறாக அண்டகோசப்படலம் இருப்பது தவறென்று தாங்கூற சாதனப்பத்திராசிரியர் அதனை மறுக்குமாற்றலற்றுத் தம்மதியை அளவிடப்பார்க்கிறாரென்கிறார். இவர்மதி முன்பே அறிஞரா லளவிடப்பட்டுவிட்டது. ஆதலின் இனி அளவிட்டுப்பார்க்கவேண்டியதில்லை. சோதிடத்திற்கும் அண்டகோசப்படலத்திற்கும் மாறுண்டோ இல்லையோவென்பதைக்காட்டும் ஒருவியாசம் சோதிடத்தோடு தமிழறிவும் நிரம்பிய ஒரு அறிஞரால் எழுதியுதவப்பட்டுள்ளது அதனைப் பின்னர் வெளியிடுவேம். ஆதலால் இவர் இப்பொழுது ஒன்றற்கும் முடிவுகட்டவேண்டியதில்லை.

* * *

இந்தப்பாலினிப் பத்திராதிபர் தாம் எழுதிய ஒரே வியாசத்திற்றானே தாம் கூறியதற்கு மாறுகொளக் கூறுகின்றாரென்பதை இங்கே எடுத்துக்காட்டுகின்றோம் இந்த ஜூலாய்மீ 27உ வெளிவந்த தம் பத்திரிகையில் 5-ம் 'பாரா'வில் கந்தபுராணமும் ஏனைய புராணங்களும் இலௌகிக நூல் என்கிறார். பின் 13-ம் 'பாரா'வில் அது ஞான நூலல்லவென்கிறார். பின் 15-ம் 'பாரா'வில் தெய்வநூலென்று உலகினர் கொள்ளும் கந்தபுராணமென்கிறார். "உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே" யாகலின் இவர் உலகினர் எனக்குறிப்பது உயர்ந்தோரையே யாகும். மேலும் சனங்கள் பொதுசனங்கள் எனச் சாமானிய சனங்களை இவர் தமது வியாசத்திற் சுட்டி யெழுதுவதும் இதனை வலியுறுத்தும்

* * *

இவரிடத்துக் காணப்படும் கூறியது கூறல் மாறுகொளக்கூறல் முதலிய குற்றங்கள் நூதனமானவையல்ல; கச்சியப்ப சிவாசாரியர் கந்தபுராணம் பாடியதற்கு ஒரு நூதன காரணம் கண்டுபிடித்திருக்கின்றார். அது உண்மையான நூதனந்தான் இந்த நவீனத்தை அப்பத்திரிகையிலிருந்து இங்கே அநுவதித்துக் காட்டுகின்றோம். உலகத்தினரே, சனங்களே, பொதுசனங்களே படித்துப் படித்துப் பாருங்கள்.

"இது இவ்வித வர்ணனைகளை விரும்பியாயினும் அதனைப் படிப்பவர்க்கு முருகப்பிரானது திருவருட்குணங்களை யறிவித்து அதுவாயிலாக ஞானசாத்திரங்களைக் கற்க அவாவுண்டுபண்ணுவதாகவுள்ளது. கோயில்களில் திருவிழாவேடிக்கைபார்ப்போர் அதனிமித்தமாயாவது போய் சுவாமியைத் தரிசித்தல்போல, உலகவியல்புள்ள இந்நூலைப்படிப்போர் கடவுட்குணங்களை யறியக்கூடும் என்ற நியாயம்பற்றிக் கச்சியப்பசிவாசாரியரால் இது நவரசங்களும் பொருந்த இவ்வாறு இயற்றப்பட்டது."

அதாவது கோவிலுக்குப்போக விருப்பமில்லாதவர் சுவாமிதரிசனஞ்செய்யப் பிரியமில்லாதவர் அக்கோவில்களில் தாசிகடனம் வர்ணம் முதலியவேடிக்கைகளைப் பார்க்கப்போய் அதனிமித்தமாகச் சுவாமியைத் தரிசித்தல்போல இக்கந்தபுராணம் இவ்வித காமசிருங்காரவர்ணனைகளை விரும்பியாயினும் அதனைப் படிப்பவர்களுக்கு முருகப்பிரானுடைய திருவருட் குணங்களையறிவித்தற்காகக் கச்சியப்பர்பாடியதாம். ஐயோ, கச்சியப்பரே ஏன் இந்த வஞ்சகவேலைசெய்தீர் இப்படியறிந்தால் இங்குள்ளார் உமது கந்தபுராணம் கோவிலிற் படிக்கப்படும்பொழுது தங்கள் பெண்களைக் கேட்கவிடமாட்டார்களே அந்தோ ஆறுமுக நாவலரே கல்வியறிவொழுக்கங்களால் மேம்பட்ட நீர் இங்குள்ளாரெல்லாராலும் சமயாசாரியர்போல மதிக்கப்படும் நீர் இவைகளையெல்லாமறிந்தும் இந்தப்புராணத்தைக் கோவில்களிற் படிக்கும்படியும் பெண்களையும் ஆண்களையும் கேட்கும்படியும் எழுதியதென்ன. இந்தப் பாலினிப்பத்திராதிபருக்குப் புலப்பட்ட வஞ்சனை கல்வியிற் பெரியார் என்று சொல்லப்படும் உமக்கும் புலப்படவில்லையா. இந்த வந்தணர் அக்காலத்தில் முளையாதது நாவலரையாவே! உமது தவக்குறைவுதான். ஒருவர் புதிதாய்க் கண்டுபிடிக்கில் இப்படியொன்றையல்லவோ கண்டுபிடிக்கவேண்டும். பாலினிப்பத்திராதிபர் கண்டுபிடித்து வரும் இந்த நவரட்பங்களுக்குத் தமிழறிஞர் தக்க சன்மானஞ் செய்வார்கள். ஆனால் பத்திராசிரியர் ஒன்றற்கும் அவசரப்பட்டு முடிவுகட்டக்கூடாது.

"காடுடைய சுடலைப் பொடிபூசி யென்னுள்ளங் கவர்கள்வன்" என்றமகாமந்திரத்துக்கு' இருசீறுபூசுகிறவர்களெல்லாரும் கள்ளர் என்று பொருள்கண்ட மனிதரும், தம்மை அறிவுடையாராகவே கருதுவர். கச்சியப்பரை மூடர் என்று கண்டதும், கந்தபுராணத்தை மாறுபடக் கண்டதுமாகிய அறிவும் அவ் வகுப்பைச்சேர்ந்த அறிவே. இவவெல்லம் தெருட்டத் தெளியாராகலின் கதை வீண்கதையாயிற்று" —சூழ்கேசரி.

## சங்கானையிற் பொருட்காட்சி.

இந்த ஆகஸ்ட்மீ 1உ சங்கானையில் நடத்தப்படும் பொருட்காட்சிக்குப் பொருள்களை யனுப்புவோர் அனுப்புதல்வேண்டுமென்றும், அடுத்தநாள் வடமாகாண அரசாட்சித்தலைவர் அப்பொருட்காட்சியைத் திறந்துவைப்பாரென்றும். பின்விவசாயப் பொருள்களின் விஷயமாகப் பிரசங்கங்கள் நடைபெறுமெனவும் திறமான பொருள்களை யனுப்பினோர்க்கு உபகாரங்கள் கொடுபடுமெனவும் ஷெ காட்சிக்காரியதரிசி தெரிவிக்கின்றார்.

## மரண தண்டனை.

யாழ்ப்பாணத்திலுள்ள மூளாய்க் கிராமத்திலே பாலைவெட்டுக் கலகம் காரணமாக கணவதிப்பிள்ளை என்பாரை இருவர் குற்றிக்கொண்டதாக குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணையின்பின் சுப்பிறீம் கோட்டாரால் குறித்த இருவரும் மரண தண்டனை விதிக்கப்பெற்றனர்.

இப்போது சிறிது காலமாக மரண தண்டனை யாழ்ப்பாணத்தில் விதிக்கக் கூடியதான குற்றம செய்பவர் இல்லாமல் இருந்தது. அவ்வித ஒய்வுகாலத்தின் பின் இதுவே முதன் முறையாக இக்கடைசித்தண்டனை விதிக்கப்பட்ட முறையாகும்.

## நூல்களைப்பற்றிய குறிப்பு.

### நாட்டு ஜீவனசாஸ்திர போதனாசாரம்

இது சிலசாஸ்திரபண்டிதரும், கொழும்பு அரசினர் ஆசிரிய பயிற்சிக்கழக ஆசிரியருமாகிய மிஸ்டர் E. C. T. கோல்சிக்கரென்பார் ஆங்கிலத்திலெழுதிய நூலின் தமிழ்மொழிபெயர்ப்பாம். இந்நூலைத் தமிழ்வித்தியாசாலைகளிலும் உபயோகிக்கும் வண்ணம் மொழிபெயர்த்தவர் உடுவில் "மான்" ஆங்கிலவித்தியாசாலையாசிரியராகிய மிஸ்டர் J. T வைரமுத்து அவர்களாவர். தமிழில் முதன் முதல் மொழிபெயர்க்கப்பட்ட இவ்வகையான நூல் இதுவேயாதலின் ஆசிரியர் மிக்ககஷ்டத்தோடு இந்நூலைப் பூர்த்திசெய்திருக்கின்றனர். ஆயினும் தமிழ்மாணவர்க்கும் ஆசிரியருக்கும் இந்நூல்வாயிலாக விளக்கவேண்டியவைகளைப் பல படங்களால் விளக்கியுள்ளார். கொழும்பிலுள்ள W. M. A. வகாபிட் சகோதரர் எனப்படும் வியாபாரசமுதாயத்தாரே இப்புத்தகத்தை அழகுற அச்சிடுவித்து வெளியிட்டிருக்கின்றனர் பிரதியின் விலை புத்தகத்தில் இடப்படவில்லை.

### பிள்ளை வளர்ப்பு.

(மூன்றம்பாகம்)

இந்நூல் சிறுபிள்ளைகளை, பெற்றோர் நோயின்றியும் திடகாத்திரத்தோடும் வளர்த்தற்காகிய வழிவகைகளையும் முறைகளையும் தமிழ் வசனநடையில் எடுத்துக் கூறுவது. இவைமாத்திரமல்லாமல் பிள்ளைகள் கைக்கொள்ளவேண்டிய நற்பழக்கங்களெவை களென்பதையும் கைவிடவேண்டிய தீயபழக்கங்களெவையென்பதையும் இச்சிறு புத்தகம் ஆங்காங்கு எடுத்துக்கூறுகின்றது. சிறுபிள்ளைகள் மாத்திரமல்லாமல் வளர்ந்தவர்களும் படித்துக் கிரகிக்கவேண்டிய அரிய விஷயங்கள் சில இதன்கண் காணப்படுகின்றன. சந்தோஷிக்க குடும்பத்தார்க்கு விசேஷமாக இந்நூல் பயன்படத்தக்கது. பிரதியொன்றன் விலை சதம் 25 பிரதிகள் யாழ்ப்பாணஞ் சண்டிக்குளியிலுள்ள பிரபல வியாபாரியாகிய மிஸ்டர் M. பஸ்தியாம்பிள்ளையிடம் பெறற்பாலன.

எமக்கு உதவிய புத்தகப்பிரதிகளின் பொருட்டு நன்றிகூறுகின்றோம்.

## தேகவியோகம்.

யாழ்ப்பாணத்தில் பாம்பரைச் சோதிடரும் பல வருடகாலமாக வாக்கிய பஞ்சாங்கம் கணித்து அச்சிட்டு வெளியிட்டு வந்தவரும் பிரபல சைவசாரியாரயிருந்தவருமான பிரம்மஸ்ரீ சந். இரகுநாதக் குருக்களவர்களின் தர்மபத்தினி ஸ்ரீமதி அமிர்தவல்லி அம்மாள் தம்மைச் சிலகாலமாகப் பிடித்திருந்த பாரிசவாத நோய்காரணமாகச் சென்ற ஆடிமீ 13உ (28-7-30) திங்கட்கிழமை இரவு சிவபதப் பிராப்தியாயினர். இவரது அந்தியக்கிரியைகள் தத்தபுத்திரர் பிரம்மஸ்ரீ சிவராமலிங்கையரால் அடுத்தநாள் பல சுற்றமித்திரர் சமுகத்தில் கிரமமாகச்செய்யப்பட்டன.

குறித்த இரகுநாதக் குருக்கள் அவர்களும் இவருமாகவே தங்கள் ஸ்தாவரசங்கம சொத்துக்களை "சோதிடபரிபாலனமடம்" எனத் தருமசாதனஞ் செய்தவர்களாவர். ஷெ இரகுநாதக்குருக்கள் காலஞ்சென்றபின் 37 வருடகாலமாகச் சோதிடபரிபாலன மடத்துக்கு இவரே தருமகர்த்தாவாகவிருந்து தருமசாதன நிபந்தனைப்படி வருடந்தோறும் "இரகுநாதையர் வாக்கியபஞ்சாங்க"த்தையும் இரகுநாதக் குருக்களின் சிராத்தாதிகளையும் நால்வர் குருபூசைகளையும் தங்கள் தத்த புத்திரராகிய சிவராமலிங்கையரைக் கொண்டு சிறப்பாக நடத்துவித்துவந்தவர். பல தரும காரியங்களுக்கும் உதவி புரிந்தவர். அன்பு கடவுள் பக்தி, அடியார் பக்தியுடையவர். இவர் இறந்தபோது வயது 67. இவரது பிரிவாற் றுன்புறும் தத்த புத்திரர், பேரப்பிள்ளைகள் பந்துக்கள் ஆகியோருக்கும் கடவுள் ஆறுதலளிப்பாராக.

—கடித.

### சென்னை கொழும்புக்குச் சமீபமாகின்றது.

விழுப்புரத்திற்கும் திருச்சிறுப்பள்ளிக்கும் மானாமதுரைக்கும் இருப்புப் பாதை சேரக இப்போது அமைக்கப் பட்டமையால் கொழும்பிலிருந்து 36 மணி நேரத்தில் பிரயாணம் பண்ண வேண்டியிருந்தமை இப்போது 24 மணி நேரத்தில் பிரயாணம் பண்ணக்கூடிய தாகிவிட்டது.

### மஹாத்மாவின் விடுதலையும் சோதிடர்களும்.

இதுகாறும் மஹாத்மாவின் விடுதலைத் தினத்தைக்குறித்தும், தினத்தை மாத்திரமன்றி நேரத்தைத்தானும் குறித்தும் அநேக சோதிடர்கள் எமது பத்திரிகையிற் பிரசுரஞ் செய்யுமாறு எழுதியுள்ளார்கள். இவற்றில் பிரபல சோதிடராயுள்ளார்சிலரின் குறிப்புகளை நாமும் நம்பி வெளியிட்டோம். ஆனால் எல்லாக் குறிப்புகளும் இந்த ஜூலைமீ 24உக்குள்ளேயே முடிந்துவிட்டன. மஹாத்மாவோ இன்னும் விடுதலையடைந்தபாடில்லை. சோதிடம் பிழையோ, சோதிடர் பிழையோ, அல்லது நிர்மாணம் பிழையோ யாமறியோம். இனிமேலாவது இச்சோதிடக் கடிதங்களை எமக்கனுப்பாதுவிடும்படி சோதிட நிருபர்களைக் கேட்கின்றோம்.

### மண்ணெண்ணெய்.

மேலுசட்டசபையிலே, சென்னையிலும் பார்க்க இலங்கையிலேமண்ணெண்ணெய் 39சதம் கலன் ஒன்றுக்கு ஏற்றமாக விற்கப்படுவதின் காரணம் யாது என ஒரு வினாவை மிஸ்டர் பிரீமன் நிகழ்த்தினர். இதற்கு உத்தரமாகக்கல்கத்தாவிலே ஒவ்வொரு தகரம் 4 கலன்களைக் கொண்ட இரண்டு தகரங்களையுடைய பெட்டியொன்று தீர்வை நீக்கி 5 ரூபா 63 சதமாகின்றது. இலங்கையில் ரூபா8 சதம் 29 ஆகிறது. ஆகவே கலனுக்கு 37 சதம் ஏற்றமாயிருப்பது உண்மையே, சென்னையில் விலையைப்பற்றி உத்தியோகக் கூற்றாக ஒரு சமாசாரமும் எட்டவில்லை. இந்த ஏற்றத்திற்கு நியாயம் இலங்கையிலே வியாபாரப் போட்டி இல்லாமையே என்று கூறப்பட்டது.

### கதிர்காம மார்க்கம்.

இம்மார்க்கத்திலே திசைமாறுமைக்கும் ஸ்ரீகதிர்காமத்துக்குமிடையேயுள்ள தூரம் சற்றுஏறக்குறைய 10 மைல் தூரமாகும். இத்தூரத்தை எத்தகையோரேனும் நடந்தேகழிக்கவேண்டியதாகும். இத்தூரத்தைக் கடக்குமுன் யாத்திரிகர் தாகத்தினால் வருந்துவது வழக்கம். இக்குறையை நீக்குவான்கருதி வெல்வத்தை கடைவியாபாரி ஸ்ரீ க. வே. அப்பாக்குட்டி அவர்கள் தம்பொருள் கொண்டும் பிறருதவி பெற்றும் மார்க்க மத்தியிலுள்ள "அரசமரத்தடி"யிலே ஓர் தண்ணீர்ப்பந்தர் வைத்து நடத்துவதாகவும் அப்படியாக 1929-ம் ஆண்டில் நடத்திய தண்ணீர்ப்பந்தருக்குப் பணமுபகரித்தவர் பெயரும் அவர்களித்த தொகையும், செலவுங் குறிக்கப்பட்ட ஒரு வெளியீட்டை எமதுபார்வைக் கனுப்பியுமிருக்கின்றனர். இதின்படி சேர்ந்த மொத்தத் தொகை ரூபா 1022-சதம் 95; செலவு 1224-சதம் 28 ஆகவே மேலதிகமான செலவு தொகை ரூபா 201 சதம் 33 மேற்படி அப்பாக்குட்டியவர்கள் சொந்தப்பணமெனவும் குறிக்கப்பட்டிருக்கின்றது. மேலும் இவ்வருடத்திற்குஇத்தண்ணீர்ப்பந்தருக்காகப் பணவுதவி செய்பவர்கள் "க. வே. அப்பாக்குட்டி வியாபாரி வெலிவத்தைக் கடை (Be'iatta)" என விலாசமிட்டு அனுப்பும்படியாவும் கேட்டிருக்கின்றனர்.

### "இந்துசாதனமும் கந்தபுராணமும்".

[வரைவோர்: வை. இ.]

(28-7-30 இந்து சாதனம் 2-ம் பக்கம் 3-ம் பந்தியின் தொடர்ச்சி.)

மேலும் இச்சிவபுராணத்தை அரங்கேற்றிய காலத்து நடந்த செலவுகள் யாவும் தொண்டைநாட்டிலுள்ள இருபத்துநான்கு கோட்டத்து வேளாளப் பிரபுக்களால் நடத்தப்பட்டன வென்பது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் வாக்கால் அறியக்கிடக்கின்றது. இஃதின்வாறாக அரசர்களை மகிழ்வித்தற் பொருட்டு கச்சியப்பசிவாசாரியார் காமசிருங்காரப்பாக்களை நுழைத்துவிட்டனர் எனப் பாலினி கூறும் கூற்றுக்கு யாம் என்ன சொல்லத்தக்கது.

இனி,

"சென்னை அரசினர் நளவெண்பா, திருவாய்மொழி, விறலிவிடுதூது, முதலிய நூல்களிற் சில பாடல்களிற் சில சொற்களையும் சில பாடல்களிற் சில அடிகளையும் சிலபாடல்கள் முழுவதையும் நீக்கியே அச்சிட வேண்டுமென்று சட்டஞ் செய்ததும், அந்நூல்கள் தற்போது அரசினர் குறித்த நியதிப்படியே அச்சிட்டு வெளியிடப்படுவதும் பலரறிந்த விஷயம். கந்தபுராணத்திலும் மேற்குறித்த செய்யுட்களை அரசினர் காண நேரிடின் அச்செய்யுட்களை அச்சிட்டு வெளியிடலாகாதென்று தடைசெய்வரென்பது நிச்சயம். கொக்கோகம் என்னும் நூல் அரசினரால் தடுக்கப்பட்டதாயிருக்கவும் அந்நூற் கருத்துக்களை யமைத்துப் பாடிய இந்திர புரிப் படலச் செய்யுட்கள் அரசினரறியின் நடுக்கப் படாவோ?

என்று பாலினியாசிரியர்உருத்தெழுகின்றனர். சங்கம் வளர்த்த தமிழ்மொழிக்கும் அதன் புதைபொருட்கும் நிறைகோல் தமிழ்மணம் சற்றும் வீசப்பெறுதவரும் இழைத்தச பழக்க, வழக்க, நாகரிக, கல்வி யாதியனவற்றிற்கு முற்றிலும் அந்நியரும், இழைத்தேசத்தவர்களை மிலேச்சரென மதிக்கின்ற ஆங்கிலேயரைக் கொண்ட சென்னையரசாங்கத்தினராம். அறுவாதத்தில், மேலே குறிக்கப்பட்ட நூல்களிற் சிலவற்றில் வரிகளையும், சிலவற்றிற் சொற்களையும், சிலவற்றிற் பாட்டுக்களையும் சென்னையரசினர் நீக்கிவிட்டனராம் அது சரியாம் இத்தீர்வைக்கு மேல் ஆராய்ச்சி வேண்டியதில்லையாம் அறிவுடைப்பெரியீர்! இஃதை நீங்கள் ஒப்புக்கொள்கின்றீர்களா? இப்படி விளிப்பதைவிடுத்து இதென்ன பேதைமை! இதென்ன மடமை யென்று நாம் கூறினால் ஐயர் சீறுகிறார்.) அரசகட்டளைக்குப் பயந்து செய்யப்பட்டதாகியபிரகாரங்களை நியாயமாகக்கொண்டு அரசாங்கக் கட்டளையின் நீதியை ஸ்தாபிக்க முன்வருகின்றனர் பாலினியாசிரியர் இதிலுள்ள தர்க்கநீதியைக் கவனித்துப் பாருங்கள். இனி, மேற்குறித்த கந்தபுராணச் செய்யுட்களை, குறித்த அரசினர் காணின் அவைகளும்நீக்கப்படுவனவாகும் என்றும் ஐயர் வெருட்டுகிறார். வெருட்டோடமையாது ஒரு நிச்சயமும் போடுகிறார் இந்திரபுரிப் படலத்தில் கொக்கோகசாரமே அமைந்துள்ளதென்றும், கொக்கோகம் தடுக்கப்பட்டமையின் இந்திரபுரிப்படலமும் தடுக்கப்படல் வேண்டும் என்றும் தர்க்கநீதியாகவே முடிவுகண்டார் பாலினியாசிரியர். கொக்கோகம் சாஸ்திரங்களுள் ஒன்றாக உள்ளதெனவும் கொக்கோகரென்னும் இருடி ஒருவரால் இயற்றப்பட்டதெனவும் நாம் கேள்வி; இன்னும் அந்நூல், சற்புத்திரப் பேற்றையும் இல்லறச் சுக வாழ்வையும் சாஸ்திரீயமாக அடைதற்கான சுகாதார வழிகளையும், கொள்கைகளையும், விதிகளையும் கொண்டுள்ளதென்றே பெரியோர் சொல்ல நாமறிவோம். ஆனால் அத்தனைரும் அறியாமலா சொல்வர். அத்தனைரொருபோது தவறினும் சென்னையரசினர் வேதாகம சாஸ்திரவிற்பன்னர்களைக் கொண்ட ஒரு ஸ்தாபனமன்றோ! ஐயரின் மேற்கோளும் அவரன்றோ! ஆனால் இதுகாறும் இந்திரபுரிப்படலத்தைப்பற்றி அறியாத சென்னையரசினர் தமிழ்நூல்களையாய்ந்து அவற்றின் புதைபொருள்களை அறிந்து அளந்த தெங்ஙனே! இஃதொன்றும் எமது அறிவாற்றலுக் கப்பாற்பட்டதாகவே யிருக்கின்றது. இஃதெப்படியாயினென் தமது சென்னையரசினருக்கு இந்திரபுரிப்படலத்தைப்பற்றிய சங்கதிகளைப் பாலினிச் சந்திதானம் எடுத்துக் காட்டாதுவிடுமென்றே நம்புகின்றோம்

இந்தியாவை அப்போதைக்கப்போது கைப்பற்றி யரசுபுரிந்த அந்நிய அரசினர்கள் இந்தியர்மதத்திற்கும், அவர்கள்சாஸ்திரங்கட்கும், அவர்கள்நாகரீகத்திற்கும், அவர்கள் தேவாலயங்கட்கும், அவர்கள் கல்விக் கழகங்கட்கும், அவர்கள் நீதிக்கும், இன்னோரன்ன பிறசெல்வங்கட்கும் செய்துவந்த முறைகேடுகள், கஷ்டங்கள், கிஷ்டங்கள் முதலியனயாவும முறையானதென்று நாம் கொள்ளவேண்டுமென்பது இவ்வாசிரியர் கருத்து.

இனி,

"இந்துக்களின் சோதிட சாஸ்திரங்களுக்கு முற்றும் மாறாக, பூமி தட்டையென்றும், சூரியனுக்கு அப்பால்சந்திரனும், அதற்கப்பால் நக்ஷத்திரங்களும், அவற்றிற்குமப்பால் முறையே புதன், சுக்கிரன், குசன், குரு, சனி முதலிய கிரகங்களும் இருப்பதாகக் கந்தபுராணம் அண்டகோசப்படலத்திற் கூறப்படுகின்றதே.

பூமி உருண்டையே யென்பதும் தட்டையன்றென்பதும் தற்காலம் நான்காந்தரம் பயிலும் சிறுவரும் நன்கறிவர்..........................

............................................................

............................................................

இவ்வுண்மைகளைத் தற்காலம் எச்சமயத்திலுள்ள வானசாஸ்திரிகளு மொப்புக்கொள்கின்றனர்."

என்று ஒரு தண்டாகாரப் புழுகைச் சுண்டிவிடுகின்றாராசிரியர்.

(5-ம் பக்கம் பார்க்குக.)

### சட்டசபைத் தேர்வு

—:0*0:—

இஃது சட்டம், சபை, தேர்வு என்னும் மும்மொழிகளையுந் தன்னகத்தேகொண்டு பொருள் தலங்குக ஓர் தொடர்மொழியாகும். ஆதலின் சட்டம் ஆவது என்னவென்றும் சபையாவது என்னவென்றும் தேர்வு என்பது என்னவென்றும் யாம் ஈண்டு அறியவேண்டும்.

சட்டமாவது ஒழுங்கு; அஃதாவது பகுத்தறிவின் திறம்படைத்த மக்கள் அறநெறி தவறாது—தத்தமக்கு நடந்திச்செல்லும் நிறமுடையது இதனை உலகினைக்காக்கும் படையெனக் கொண்டு செங்கோல் செலுத்துவர் அரசர் இதன் திறனே கூறற்கரிது. கடன்மதின் மீதின் நடமாடுமொருவன் அம்மதின் விழிப்பு கடக்க எதனை அச்சங்கொளவாரோ அது போலவும் கடந்தவன பயிற்றியின் நிலைமையைப்போலவும் மக்கள் தம்மை அச்சுறுத்தி நிச்சயமாய் மெய்ச்சவைக்கும் இயல்பினையுடையது பெரியவர் என்றும் சிறியவர் என்றும் பெருமை சிறுமை பாராட்டாது அரசர் தமமையுங் குடிகள் தமமையும் ஒரு சேர ஒரு நெறிக்கடியுப அருந்திறல் படைத்தது அரசரை அறநெறிகாப்பதும் இதுவே. குடிகளை அறநெறி காப்பதும் இதுவே அன்றி அரசரெனப்படுவோர் அரசாளும் பதவியினையெய்துமபோழ்து தங்குறைதீர்ந்து குணமுடையோராய் வருபவர் அல்லர், நாட்டைத் திருத்தவைப்பதும் இதுவே வளம்படைத்த செல்வநாடாக்கிச் சிறுதவைப்பதும் இதுவே. கலைபெருக்கிக் கற்றோர்க் குறைவிடமாக்குவதும் இதுவே கலவியும் செல்வமும் காணக்கிடையாது வனப்புக் குறைத்துக் கேட்டினைப் பயப்பதும் இதுவே. மறத்தைக்கடிந்து அறத்தை வளர்க்கும் அருமருந்தும் இதுவே.

இத்தகைய ஆற்றல்படைத்த சட்டத்தினை யாக்கவும், ஆதரிக்கும் உரிமையுடையோர் கூட்டமே ஈண்டு சபையெனக்கருதியது. அஃதாவது அறிவின்வல்லார் பலர் குழுமிய கூட்டமேயாம் முக்குணவயத்தானும் அறிவின் திறத்தானும் ஒருவரது உட்கோள் மாறுபடுமாதலின் அம்மாறுபாடு தீர்த்தற்கு வேறுபலர் வேண்டும். ஆனதன்மைபற்றியே அறிவிற்பெரியார் பலர் வேண்டப்படுவர் இச்சபை சட்டநிருபணசபை சட்டநிறைவேற்றுசபை என இருதிறப்படும் சட்டநிருபணசபையாவது: சட்டங்களை (ஒழுங்குகளை) உண்டாக்கும் சபை. நிறைவேற்றுசபையாவது. அங்ஙனம் உண்டாக்கிய சட்டங்களை ஆதரிக்கும்சபை.

இச்சபைக்குரியார் நூலறிவோடு நுண்ணறிவு: உலக அறிவும் நிரம்பப்பெற்றவராய் சீவகாருண்யம் உடையவராய் அறநெறிதவறாப் பண்புடையராய் இருத்தல் வேண்டும். சபையின்கண் ஒருவர்க்கு ஒருவர் முகமன்பாராட்டுபராவது இருத்தல் கூடாது, பேசுந்திறனுடையராயிருக்கவேண்டும். எடுத்த எந்த விடயத்தையும் அஞ்சாது பிறரறியவிளக்கும் ஆற்றலாளராய் இருத்தல் வேண்டும். இவர்களிலேயே உலகத்தின் நன்மையும் தீமையும் தங்கியிருக்கிறது. இவர்கள் முகமனாலாவது அச்சத்தாலாவது கூச்சத்தாலாவது கோணுவாராயின் அரசன் கோலும் கோணும். கோணவே உலகம் கெட்டுவிடும். உலகத்தின் கண்ணுள்ள ஒவ்வொரு நாட்டினையும் நகரினையும் தெளிவுற விளக்கி அரசர்க்குக்காட்டும் கண்கள் போன்றவர்கள் இவர்களே. இவர்கள் குருடர்களாயின் அரசன் என்செய்வான். அரசனது கண் பழுதுறின் அவர் பார்ப்பது எப்படி; அன்றியும் அச்சபையிலுள்ளார் தாம் மற்றையோரிலும் வீரன் என்னும பண்பையுணர்த்துவான் கருதியாவது அச்சபையின்கண் ஒன்றினை நாட்டுதலாவது பேசுதலாவது கூடாது அங்ஙனமாயின் அவர் மற்றையோரால் வெறுக்கப்பட்டு ஒதுக்கப்படுவர் உண்மையிலேயே யாருக்காக உழைக்கும் மனக்குமுடையராய் இருக்கவேண்டும் அவர் தாம் எடுத்த விஷயங்கள் சீக்கிரத்தில் முடிவுறும்.

இங்ஙனம் தகுதியுடைய ஒருவரையே தெரிதல் வேண்டும் அஃதாவது நாட்டவர் தங்கட்காக அச்சபைக்குரியவராக ஒருவரைத் தெரிதல். இதுவே ஈண்டு தெரிவெனப்பட்டது தெரிவு=தேர்தல்=ஆராய்தல் முன்னர் யாம் கூறிய அரியபண்பினையுடைய ஒருவரையே தெரிபவர் தெரிதல்வேண்டும் முகமன் கருதியாவது தனது லாபங்கருதியாவது ஒருவரைத் தெரிதல் கூடாது உண்மையில் அறிவு, அன்பு, ஆண்மையுடையவராய் இருப்பவரே அச்சபைக்குரியர் அவரையே அந்நாட்டவர் தெரிதல் வேண்டும் அன்றித் தெரியப்படுபவர் தாமாய் நாட்டார்க்குத் தமமைத் தெரிவித்து தாமே அலைந்து வருந்துவர். இத்தகையார் தமது நற்குண நற்செய்கைகளால் முன்னரே தம்மைத் தெரிவிக்காதது யாது குறையோ. இவர்களே தமக்குத்தாமே நன்கு மதிப்பைத் தேடுபவர் தாமே தம்மில்லை இருக்க நாட்டவர் அவரை யெழுப்பியன்றோ சபைக்கு அனுப்பவேண்டும் நற்குண நற்செய்கை அறிவுடைத்த ஒருவரிடத்து நாடவர்க்கு ஒருபோது வெறுப்பு உண்டாகாது. நாடவர்களே! உண்மையில் குணம் நிறைந்த ஒருவரையே தெரியுங்கள் பின்னர் உங்கட்கே நீங்கள் இடரைத் தேடாதீர்கள். சட்டசபை அங்கத்தவர்களைத் தெரிபவர்களே தம் நாட்டுக்கு நன்மையையும் தீமையையும் நாட்டுபவராவர்.

இங்ஙனம்
திருநெல்வேலி யாசிரியகலாசாலை
மாணவன்
ஆ. சின்னையாபிள்ளை.

### சோதிடபரிபாலினியின் சொற்றடுமாற்றம்.

—:*0*:—

சோதிடபரிபாலினி என்ற இப்பத்திரிகை, தான்கொண்ட இப்பெயருக்கியையச் சோதிடசாஸ்திரங்களிற் பொதிந்து கிடக்கும் நுட்பமான பொருள்களையும், அவற்றிற்குச் சார்பாகிய விஷயங்களையும் எடுத்து இனிது விளக்குவதே முறை. சோதிடசாஸ்திரங்களில் எவ்வளவோ அரிய நுட்பமான விஷயங்களுள்ளன. எத்தனையோ சோதிட சாஸ்திரங்கள் வெருமதி நுணுகியுணரத்தக்க பொருளாழமுள்ளனவாய் விளங்குகின்றன. அவற்றின் பொருளையும், ஆழ்ந்த கருத்துக்களையும் கிரமமாகப் பிரசுரிக்கல் அறிவு விருத்திக்கேதுவாமே! இடையிடையே வானசாஸ்திரங்களையும், கோசர பலன்களையும் பிரசுரித்தல்மாத்திரம் சோதிடபரிபாலனமாகுமா?

ஆரம்பத்தில் வெளிவந்த சில பத்திரிகைகளில் நல்ல விஷயங்கள் பல வந்தன. அது தன் சோதிடபரிபாலனத்தை ஒதுக்கிவைத்துவிட்டு, நூலாசிரியர், உரையாசிரியர்களைக் கண்டனம் புரியத் தொடங்கியது. இப்பொழுது சைவாலயங்களையும், சைவக் குருமாரையும், சைவர்களையும், புராணங்களையும், அவற்றினாசிரியர்களையும் மனம்போனவாறே நிந்திக்கத் தொடங்கிவிட்டது. கம்பராமாயணம் சடாயு உயிர்நீத்த படலத்துக் கவியொன்று ஈண்டு ஞாபகத்துக்கு வருகிறது. அதாவது:—

"இருவினை துறந்த மேலோ
ரல்லன்கொ லிவனென் றெண்ணி
அரிவையு மைய மெய்தா
ஆரிவன் றெனென் றென்றுந்
தெரிவரு நிலைய ளாகத்
தீவிடத் தரவந் தானே
உருகெழு சீற்றம் பொங்கிப்
பணம்விரித் துயர்ந்த தொத்தான்."

இதன் கருத்து:—(இராவண சந்நியாசியின் மாயவேடம் நீங்கக்கண்ட) சீதாதேவி (நாயிதுவரை எண்ணியவாறே) இவன் நல்வினை தீவினை நீங்கிய பெரியோர (ர்களுளொருவ) னல்லன் போலும் என்றெண்ணிச் சந்தேகங் கொண்டு யாவனென்று தெரியமாட்டாத நிலைமையையுடையளாக (த்திகைத்து நிற்கும்போது) இராவணன் கொடிய விஷத்தையுடைய பாம்பு கோபம்கூர்ந்துப் படத்தைவிரித்து (உயர்த்தி நிமிர்ந்து) மேலெழுந்ததையொத்துத் தன்சொந்த வடிவத்தைக் கொண்டெழுந்தான் என்பதாம்.

இதுபோலவே இப்பத்திரிகை ஆரம்பகாலத்தில், இது சோதிடவிஷயங்களாதிய நல்ல கட்டுரைகளைத் தன்னகத்துக் கொண்டு வரும் என்று வரவேற்று வாசித்தோம். பின் கண்டனம் கொண்டுவரத் தொடங்குவதைக் கண்டு இது சோதிடபரிபாலினியாகாது கண்டனபரிபாலினி ஆகும் காரணமென்னையோ எனத் திகைத்திருந்தோம். இப்பொழுதிப்பத்திரிகை சோதிடபரிபாலினி என்ற பெயருள் மறைந்து ("தவமறைந்தல்லதாற்றி" என்றபடி) கண்டனரூபமாக நிமிர்ந்தெழுந்து நிற்கிறது. இது நன்மைக்கோ? தீமைக்கோ? அன்றியும், சைவசமயிகளால் மிக மேன்மையாகப் புகழ்ந்து அன்போடு பாராயணஞ் செய்யப்படுவதும், (வைசூரி பெரிய நோய்கள் பரவுங்கால் மிக்க நியமத்தோடு பாராயணஞ் செய்தால் அந்நோய்களை ஒழித்துப் பெருஞ் சுகந்தரும் தெய்வீகசக்தியமைந்ததும், தன்னைக் காதலித்தோர் தமவோரை இந்திராதிப் பார்மேலின்பமுற் றினிதுமேவிச் சிந்தையினினைந்த முற்றிச் சிவகதி யதனிற் சேர்க்கும் பெருமை வாய்ந்ததுமாகிய கந்தபுராணத்திலும், அதனாசிரியராகிய கச்சியப்பசிவாசாரியசுவாமிகளிலும் தாவிக் குற்றங்கற்பித்த பீடில்புன்மொழிக் கட்டுரையைச் சுமந்து வரத் தொடங்கிவிட்டது.

கச்சியப்பசிவாசாரியர் போலிப் புலவராம். அவர் முதனூலாகிய வடமொழிக்காந்தத்திற் சொல்லப்படாத காமமயக்கப் பாடல்களை கவிர்த்து நூலிற்பாடிவைத்துத் தமிழரை மயக்கத்து எமிழ்த்திவிடுவது எவ்வளவுமடமையாம். என்னே காலக்கொடுமை!

"அத்தகு மயிலைக் கண்டமாத் திரையே
யவன்பெருங் கவினுனத் தூப்ப
வித்தக விவையரீ மணம்புணர விளம்புவா
னெழுந்தவென் விழைவால்
முத்திற வுயிர்க்கு முயிரென நின்ற
முதன்மையை யென்பது மயர்த்தில்
இத்திறங் கிளந்தே னினைத்துநீ
யறிதி யெம்பிரா னெழுந்தருள்"

என்று நாரதமுனிவர்கூற

"கேட்டலு மகிழ்ந்திங் கிருவென முனியைக்
கிழமையி னிருத்தி முன்புறத்தி
னீட்டிரும் பொருளின் றுறைகளுங் கற்பி
னியற்றமக் கடியுமன் வழக்கக்
காட்டிய குமரன் களவெனு மன்பக்
கடற்றுறை வழக்கமு முலகி
னூட்டிய றதலுங் கருத்தொடுந் தமியே
கண்ணினன் வள்ளிமால் விலங்கல்"

என்று தணிகைப் புராணத்திற் சொல்லியவாறே களவியலை உலகினர்க்குக் காண்பிக்கத் திருவுளம்பற்றிய சண்முகக்கடவுள் அதற்குத்தக மயங்கியதாக நடித்தாரேயன்றி உண்மையின் மயங்கினாரல்லர்.

("வர்த்ததே த்ருஷ்ணா பவத் சம்போகலக்ஷணா, தாம் நிவாரய ஸர்வாங்க ஸுந்தரே தயயாமயி" (சர்வாங்க சுந்தரியே! உன்னோடு சம்போகிக்க வேண்டுமென்ற ஆசை வளருகிறது. நீ என்னில் தயவுவைத்து அதை (த் தடுத்து) நிறைவேற்றுவாயாக) என்று இன்னபலவாகக் காந்த (ஸம்ஸ்கிருத) புராணமுங் கூறுமாகலின் கவிர்த்து கச்சியப்பசிவாசாரியர்

பாடிவைத்தாரென்றால் அறியாமையானெழுந்த புன்மொழி என விடுக்க.)

சண்முகப்பரன் வல்லிநாயகியாரிடம் போக வேட்டுவுருப்பமுறவதைக்கூறுமிடத்து, "கன்று காமநோய்க் கவலை (யுற்றுனென்றது) உன்னவைத்தான்" என்றும்,

"ஒருமலர்க் கறிவினுன்னே
உணர்வதாயுணர்வை யீந்து
மிருமலர்க்கேற்றினெறி
யெதிர்ந்திருணிக்குஞ்செய்தும்
பொருவின் மும்மலருக்கன்றோர்
போலவந்தறிவைத்தந்தும்"

என்ற மயூரகிரி புராணத்திற் சொல்லியபடி, மும்மலங்களையுடைய சகல ஆத்துமாவாகிய மனிதருப மெடுத்த வல்லிநாயகியை ஆட்கொண்டருளும் பொருட்டு, (திருவாதவூரடிகளை ஆட்கொண்டு திருவருள்புரிய ஞானாசாரியராகவும், திருநாவலூரடிகளை (சுந்தரமூர்த்தியை) ஆட்கொண்டருள விருத்தவேதியராகவும் திருவுருவெடுத்த தந்தையாராஞ் சிவபிரானைப்போல, வேட்டுவராகிய,

"மையல் மானுட வடிவர் தாங்கினன்" என்றும், "வேட்டுவக் குலத்தைக் கொடு குமரன்றோன்றினன்" என்றும், கச்சியப்ப சிவாச்சாரியர் கூறுவதாலும், "வ்யாதவேஷம்க்ருஹீத்வாதகிராத் ஷண்முகஸ்ததா" (அறுமுகக்கடவுள் வேட்டுவவேஷத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்) என்று ஸ்காந்தம்சொல்வதாலும், "நங்கை தன்னைத் தேடினன் குமரற்கீது திருவிளையாடல் போலாம்"

"உலைப்படு மெழுகதென்ன
உருகியே ஒருத்திகாதல்
வலைப்படுகின்றன்போல
வருந்தியே யிரங்காநின்றன்
கலைப்படு மதியப்புத்தேள்
கலங்கலம் புனலிற்றோன்றி
யலைப்படு தன்மைத்தன்றோ
அறுமுகனுடலெல்லாம்"

என்ற (கச்சியப்பசிவாசாரியர்) விளக்கவைத்தலாலுப் கந்தமூர்த்திக்கு உண்மையில் மயக்கமில்லை என்பது வெள்ளிடை மலைபோற்றெள்ளிதிற் புலனாகின்றதே.

(ஆத்துமா விரும்பியதை அநுபவிக்கச்செய்து விருப்பை நீக்கி ஆட்கொண்டு முத்திகொடுப்பதே முழுமுதற்கடவுளினியல்பாம். ஆதலின் சண்முகத் தெய்வத்தை மணக்க விரும்பி (விஷ்ணுவின் மகளாயிருந்தபோது) தவம் புரிந்த வள்ளிநாயகியாருக்குக் களவியன்முறையே அவ்விருப்பை நிறைவேற்றி ஆண்டருளினரென்பதே உரியகருத்தாம்.)

களவியல் என்றதனால் உலகினர் யாவருங் களவொழுக்கத்து வீழ்ந்து மயங்கித் திரியுமாறு பாடினாரல்லர். களவியலின் சிறப்பை இறையனாரகப்பொருளில், "அன்பினைந்தினைக் களவெனப்படுவ" என்றற் றொடக்கத்தனவாய் வருஞ் சூத்திரங்களாலும், அவற்றிற் குறைகண்ட நக்கீரனார் "என்பயக்குமோ இதுநற்களவெனின் வீடுபயக்குமென்பது என்னை? இது களவியலன்றே இதுநற்க வீடுபயக்குமாறென்னை? களவெனுஞ் சொற்கேட்டுக் களவு நீதென்பதூஉம், காமமெனுஞ் சொற்கேட்டுக் காமந்தீதென்பதூஉமன்று. மற்றவை நல்லவாமாறுமுண்டு" என்பதாதியாக விளக்கிப்போந்தமையாலும் நன்குணர்தல்கூடும். தவிர,

இக்கந்தபுராணத்தைப் பெருங்காப்பியமுறையிற் பாடியருளிய கச்சியப்பசிவாசாரியர்,

"பெருங்காப்பிய நிலை பேசுங்காலை
வாழ்த்து வணக்கம் வருபொருளிவற்றினொன்
றேற்புடைத்தாகி முன்வர வியன்று
நாற்பொருள்பயக்கு நடைநெறித்தாகித்
தன்னிகரில்லாத் தலைவனை யுடைத்தாய்
மலைகடனாடுவளநகர்பருவம்
இருசுடர்த்தோற்றமென் றினையன புனைந்து
நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழி னுகர்தல் புனல் விளையாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியிற் புலத்தல் கல்வியிற் களித்தலென்
றின்னனவனைந்த நன்னடைத்தாகி" (தண்டி
—யலங்காரம்

என்று தண்டியாசிரியர் கூறியவாறே அமைந்த வருணனைகளோடு,

"முன்னோர் நூலின் முடிபொருங்கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங்கூறி
அறியாமரபினது"

என்ற இலக்கணம் பிறழாமற் பாடியருளினரோயன்றிக் "காலந்தோறும் கற்குந் தமிழ்சொல்லாம் கடுங்காமிகளாய் அறிவுகெட்டேவரு" மபடி பாடியவரன்று.

ஆனால், கச்சியப்பசிவாச்சாரியாதிய புராணசிரியர்களைப் போலிப் புலவரென்பார், இறையனார், நக்கீரனார், தண்டியாசிரியராதியரையும் போலிப்புலவரெனத் துணிவாரோ? கச்சியப்பசிவாச்சாரியர் பாடிய கந்தபுராணத்தை(ச் சிவபுராண படனவிதியோடு) அச்சிடுவித்த ('மச்சேறி மங்கிறைந்த பல எட்டினையும், அச்சேற வைத்த அருந்திறலான் மெச்சவரு நாத்திறமார்") ஆறுமுகநாவலர்களை [...] னை துணிவாரோ? அங்ஙனே துணிவாராயின் புராணஞ்சிகளை அகற்றி ஒழித்துவிட்டுத் தாமே உண்மைக் கவிராயராயமர்ந்து தங் கருத்துக்களைப் பொதிந்து புதுமுறையிற் புதப்புராணஞ்சிகளைப் பாடி அச்சிடத் துணிவார்கொல்லோ. நன்று! நன்று!! "கண்டன மின்று யாங்கலியின் வண்ணமே")

இவ்வாறு பொல்லா சிந்தனை மலிந்து பொலிந்த கட்டுரைகளை(ப் பிராமண வருணத்தினராகிய) பத்திராதிபர் (உவர்த்தொதுக்கிவிடாமல்) எற்றச் (சற்றும் ஆலோசனையின்றி) பிரசுரித்ததும் நீதியாமோ?

ஆணவருபியாகிய சூரபத்மனை யழிக்கும் பொருட்டு அறிஞராயோர் சிந்திக்குந் தொல்லைத் திருமுகமாறுங் கொண்டு வீற்றிருந்த பேரொளிப் பிழம்பாகிய சிவபிரானுடைய நெற்றிக் கண்களாறினும் அக்கினிப்பொறிகளாகத் தோற்றி, அருவமு முருவுமாகியாதியாய்ப்பலவாயொன்றாய்ப் பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர் மேனிகொண்டருளிய, கலியுக தெய்வமாங் கந்தமூர்த்தி அடியெடுத்துக் கொடுத்து (நாடோறும் பாடப்பெற்ற பாக்களில் வழுவகளைந்து) திருவருள் செய்தங்கீகரித்த கந்தபுராணத்தையும், அக்கந்தமூர்த்தியின திவ்விய திருவருளுக்கம்பெற்ற உத்தமப் புலவராங் கச்சியப்ப சிவாசாரியரையும் நிந்தித்த மனிதசென்மம் என்ன இடுக்கணுறுமோ? யாமறியோம்

"குன்றமெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையாய்-என்று
மிளையா யழகியா யேறூர்ந்தானேறே"

நீயே அறிந்தருள்.

இங்ஙனம்
சி. வ. குமாரசர்மா,
திரிகோணமலை

## சேர்ந்து வாழ்வதே "சிறந்த வலிமை."

ஒரு தேசம் அல்லது ஒரு சன சமுதாயம் முன்னேற்ற மடையவேண்டுமாயின் விசேஷமாகப் பாடுபடுதலே அவசியத்திலு மவசியமென்பதைக் கற்றுணர்ந்த பெரியோர்கள் ஒப்புக்கொள்வர்.

இவ்விலங்காபுரியிற் காணப்படும் நம் தமிழர்களாகிய யாங்களோ பெற்றிருந்த ஒற்றுமை முதலிய உயரிய தத்துவங்களை கைவிட்டு "எடுப்பார் கைப் பிள்ளை" என்று தன்னிலைமையறியாது தத்தளித்து வருந்தி வருகின்றோம். அப்படித் தத்தளிப்பதற்குக் காரணம் யாது? நம்மில் ஒற்றுமை சேர்க்கை முதலிய உயரிய நோக்கங்களில்லாமையே காரணமாகும். அவ்வொற்றுமை முதலிய பெருங்குணங்கள் நம்மிடத்தில குடிகொண்டிருந்ததைப் பேணாது கேவலம் நாம் இறுமாப்புக்கொண்டு அதனைக் கலைக்க ஒருவர் முன்பட்டு தங்கள் ஒற்றுமையை நசுக்கி சுயேச்சையாய் வாழ்வதற்காவது யோக்கியதை யுண்டா என்பதை சிந்தித்துப் பாருங்கள். முந்திய காலங்களில் பசுவும் புலியும் ஒரு துறையில் ஜலத்தைப் பருகியதாக நாம் கதைகளில் வாசித்திருக்கின்றோம். ஆனால் உத்தம குணசீலர்களே! இவ்வொற்றுமையை அநுசரிக்கத்தக்கவிதமாக குமரேசசதம் கூறுவதைக் காண்க.

சத்தியர் தவறு திருப்பவ ரிடத்தினிற்
சார்ந்ததிரு மாதிருக் குஞ்
சந்ததந் திருமா திருக்கும விடந்தனிற்
றனதுபாக் கியமிருக் கும்
மெய்தவரு பாக்கிய மிருக்கும விடந்தனில்
விண்டுவின் களையிருக் கும்
விண்டுவின் களைபூண் டிருக்கும விடந்தனில்
மிக்கான தயையிருக் கும்
பத்தியுட னினியதயை யுள்ளவ ரிடந்தனிற்
பகர்தரும மிகவிருக் கும்
பகர்தரும முள்ளவ ரிடந்தனிற் சத்துரு
பலாயனத் திறலிருக் கும்
வைத்திசையிருந்ததிற லுள்ளவரிடத்தில்வெகு
மன்னுயிர் சிறக்கு மன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

என்னும் இப்பாடலை நுண்மையுடையோர்கள் மனஇருளை நீக்கி சோதிமயமாய் விளங்கும் ஒளியைப் பிரகாசப் படுத்தினால் ஒற்றுமை மேன்மை யென்பது சொல்லுமாக, சகோதர! சகோதரிகளே! இவ்வுலகில் வாழும் நன்மக்கள் ஒற்றுமை இன்மையினால் மதவேற்றுமை, வருணவேற்றுமை, தன்னுண்மை, தாண்டவக் காலை பூண்டி யாடுதலில் எவ்வாறு ஒற்றுமை யடையும். அந்தோ! பெருந்துக்கம்! துக்கம்!! எங்கள் மன ஒற்றுமை யெங்கும் கமழும்படி செய்வது நம்தேச ஒற்றுமைக்கொடியை யெங்கும் பிரகாசமடையச்செய்வது நம் நாட்டு மக்களின் கடமையேயாம். மற்ற ஆங்கில தேசத்தாரின் ஒற்றுமையைக் கண்ணுறும்போது ஒவ்வொரு உள்ளங்களில் வேரூன்றி நடத்தக் கடப்பாடுள்ளவராய் வேண்டுமன்றோ. ஒற்றுமையை இனியாகிலும் கைக்கொள்ள இக்கட்டுரையை இகழாது சிந்தித்துக்கொள்ள அடியேன் தாழ்மையாக கேட்டுக்கொள்கிறேன்.

எல்லாம்வல்ல ஈசனை வாழ்த்துகின்றேன்.

இப்படிக்கு,
ஒற்றுமைத்தொண்டன்,
ஹெந்தலை, ப. பொன்னையா.
கொழும்பு. 25-7-30.

[இக்கடிதமும் இவை போன்றவைகளும் கெந்தலைக் குஷ்டரோகிகள் சிகிச்சாவாசத்திலிருந்து வருவதால் அவர்களை ஊக்கப்படுத்துமாறு விஷய ஆழத்தை அதிகம் நோக்காது பிரசுரிக்கப்படுகின்றன.—ப-ர்.]

### இந்துசாதனத் தனிப் பிரதிகள்.

இந்துசாதனத் தனிப்பிரதிகள் இந்துசாதன ஆலயத்திலும், வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலடி M. S. சுப்பிரமணியம் சகோதரர்களின் "இலக்குமி வாசம்" என்னும் கடையிலும், றெயில்வே ஸ்டேஷனிலுள்ள P. முத்துச்சாமி கடையிலும் அவ்வக்காலங்களிற் பெற்றுக்கொள்ளலாகும்.

## சுதேச நன்மை விருத்திச் சங்கம்.

### இரண்டாம் நிகழ்ச்சி.

நிகழும் 1930ம் ஆண்டு ஆடிமீ 3௳ வியாழக்கிழமை சாயந்தரம் ஐந்துமணியளவில் திரு. 10ம் கெம்பர் பட்டணத்தெருக் கடற்கரையோரத்தின்கண்ணுள்ள சுப்பிரமணிய சுவாமி கோவிலின் முன் இச் சங்கம் நிகழ்வதாயிற்று இச்சங்க நிண்ணயமானது நமது நாட்டில் தற்போது நடந்துவரும் சுகாதார சமுதாய சங்கமென்பது இவ்வூரிற்கவசியமோ அல்லவோ வென்பதை நிச்சயித்தற் பொருட்டேயாம். இச்சங்கத்தில் பிரமஸ்ரீ ப கு யோகீஸ்பரக் குருக்களவர்களை அக்கிராசனராகவும் அவ்வயலகத்தோர்களில் ஒருவரான ஸ்ரீ S வல்லிபுரமவர்களைக் காரியதரிசியாகவுந் தெரிவுசெய்து பத்துப் பதினொன்று பன்னிரண்டாம் கெம்பர்களில் குடியிருக்கும் சனங்களில் ஏறக்குறைய எண்ணூறுபேர்வரையில் சமுகமளித்திருந்தனர் இதில் கௌரவ ஸ்ரீ ம. மு சுப்பிரமணிய பிள்ளை நியாயதுரந்தரர், சி பொன்னுத்துரை பண்டிதர், ஏ சரவணமுத்து உபாத்தியாயர், V S செல்லையா உபாத்தியாயர், R சஞ்சக்கண்ணு உபாத்தியாயர், ஏ ஐயாத்துரை கொந்தருத்து, P. சிவசுந்தரம் என்னுஞ் சுதேச பிரபுக்கள் முறையே யெழுந்து இச்சுகாதார சமுதாய சங்கத்திற்காய் மாதாந்தமல்லது வருடாந்தஞ் செலவழிந்து வரும் பணத்தொகையையும் இத்தொகையின் நாற்பங்கு நானும் ஊர்ச்சனங்கட்கு யாது பிரயோசனங்களுமில்லாதிருப்பதால் வறிய சனங்கள் மெய்வருந்தி சம்பாதித்த பொருளில் வாடை வரிகளாய் அறவிட்டுக்கொண்ட பணத்தொகையை அவத்தில் செலவிட்டு மற்றையோர்கள் உண்டு உடுத்துக் கழித்திருக்கச் செய்வது எத்தனை மதியீனமென்பதையும் ஏறக்குறைய ஐயாயிரங் குடிசனங்கட்கு மேற்படாது சீவித்து வரும் ஒன்றரை அல்லது இரண்டுமைல் விஸ்தீரணமுள்ள ஓர் பட்டணத்திற்கு ஓர் சுகபரிபாலன சங்கம் அல்லது லோக்கல்போட், என்றிக்கம்பேன், சுகாதார சமுதாய சங்கம் என இரண்டு மூன்று ஊழியங்களிருப்பது ஒருதலைக்கு இரண்டு ஆய்க்கினை கிடைப்பதுபோல் ஊர்ச்சனங்கட்கு யாது பிரயோசனங்களுமின்றி வறுமை, பிணி, கஷ்டம் முதலிய இடுக்கநெருக்கங்களை யதிகரிக்கச் செய்து ஏழைகளை வருத்துவதற்கிடமாவதையும் இற்றைக்குச் சில வருடங்களாய் நம் திருநகரசங்கத்தவர்கள் செய்து வந்த ஒரே வேலையையே இப்பொழுதும் சுகாதார சமுதாய சங்கத்தினர் செய்து வருகின்றார்களேயன்றி மற்றொன்றும் புதிதாய் நடக்கவில்லை யென்றும் இவர்கள் கொண்டுவந்த சுகாதாரத்தால் எத்தனை கூன் குருடு, செவிடு, சொத்தி, சப்பாணி, குஷ்டரோகி, ஈழை இருமல் பிடித்த ரோயாளர்களைச் சொஸ்தப்படுத்தி இருக்கிறார்களெனவும், இவர்கள் இவ்வூரிற்கு வருமுன் பொல்லாக் காலத்தால் மரித்துப்போனவர்கள் போக, வந்தபின் சுகாதாரமில்லாது மரித்துப்போன எத்தனையோ பேர்களில், ஒருவருக்காவது தங்கள் சுகாதாரத்தைக் கொடுத்து மரணத்தைத் தடைசெய்திருக்கிறார்களா? இவ்விதமே ஊருக்குபயோகமற்ற ஓர் சங்கத்தினரைத் தேவையில்லையென்றாலுஞ் சீ, சீ, இதென்ன பயித்தியமா? செத்தவர்களை ஆரால் எழுப்ப முடியும் நாங்கள் துப்பரவு, புனிதம், ஆரோக்கியம், நாகரீகங்களை உங்கட்குப் படிப்பிக்க வந்திருக்கின்றோம் என்னும் 'வாய்ப்பறை' அறைந்துகொள்ளுகின்றனர் இப்பிரசித்த ஏலத்து ஆதாயத்தைக் கவனிக்கும்போது

"தன்னையறியாத சன்னதங் கொண்டுமே
தன்சுகம்பேண அறியாதோர்
பின்னையொருவர் சுகத்திற்குதவி செய்
பேதமை கேட்டுவா மாமயிலே"

என்னுங் கும்மிப்பாவின் உல்லாசத்தை வெளிப்படுத்துகின்றது. இச்சுகாதாரத்தை பிவ்விடத்தில் வெளிப்படுத்தி நிலைப்படுத்தி மேன்மைப்படுத்தத் துணிந்தோர்களெவர்க்கும் அறிவிலாது வளர்ந்த பெரும் யோக்கியதையைத் தாந்தக்கதான தங்கள் சொந்த சுகாதாரமுறைகளைச் சற்றுமறியாதோராய் பிறசாதியாரின் நற்சாட்சிப் பத்திரத்திற்குத் தக்கவாறு அன்னவரின் சுகாதார முறைகளிற் சிலவற்றை, அதற்குஞ் சந்தேகமா என்னுங் கிளிப்பாடமாகக் கற்றுக்கொண்டு தங்கள் சீவியத்தை உத்தியோகப் பவுஷோடும் எமனுக்காய் நடாத்திக் கொள்வதற்கு இடந் திறந்துகொள்வதே யல்லாமல் வறிய சனங்களுக்கு இவர்களால் உண்டாகும் பயனியாது? இவர்கள் மற்றையோருக்குச் சுகாதாரத்தை ஏற்படுத்துவிதமெது? இவ்வாங்கில சுகாதார முறைகளைக் கையாண்டு நடக்க முயல்வேன் ஈற்றில் ஆங்கிலருமின்றிப் பாரதருமின்றி ஒன்று மற்றோராய் இடை நடுவில் மறைந்து நிற்குஞ் சிலர்க்கு மட்டுமே இச்சங்க சேவை ஆகசியகமாவதேயன்றிப் பைந்தமிழ் வளரும் பாரதநாட்டின் தமிழ் மக்கள் வசிக்கும் தாயகம்போன்ற தேசங்களிலிருக்கும் பலர்க்கும் இச்சங்க சேவை ஓர் கொடிய பாஷாணத்தை ஊட்டுவது போலுமிருக்கின்றது. இப்பாஷாணத்தின் நிலைமையை விபரித்துச் சொல்லப்புகின் நமது அறிவாளிகளான முன்னோர்கள் எல்லாம் பெரும் மடையர்களென்றும் இப்பொழுது நாங்கள் செய்வதே எல்லாவற்றிலும் மிகச்சிறந்ததென்றும் பாசாங்காய் பகட்டும் பொட்டுக்கேட்டைப் புட்டுப் பார்க்கும்போது இச்சுகாதார முறைகளை அனுசரிப்போர் முன்னொரு காலத்தில் நிர்வாணிகளாய்க் காட்டுக் குழை கொப்புகளையுந் தோல், இறகு, மரப்பட்டை முதலியவைகளையுமுடைகளாகக்கொண்டு சௌசஸ்நானதிகளின்றிப் புனிதமற்ற காட்டு மனிதர்களான பிலேச்சாதியாராய் இருந்தார்களென்பதை இப்பொழுதும் இவர்கள் சௌசஞ் செய்து கொள்ளாதிருக்கும் அறிகுறியினாலும் விளங்கிக் கொள்ளத்தக்க சரித்திரவாயில்களைக் கவனிக்கும்போது தக்க கல்வி செல்வம், ஆரோக்கியம், நாகரீகம், சுத்தம், புனிதம், பரிசுத்தம், என்னும் அஷ்டஐசுவரியங்களோடுங் கூடி இந்திர பவுஷாய் வாழ்ந்திருந்த நம் முன்னோர்களின் சுழிபற்ற

## தேவை!

"தமிழன்" காரியாலயத்திற்கு பத்துக் கொம்போஸிட்டர்கள்வரை தேவை. ஆங்கிலமுந் தமிழும் அறிந்தவர்களாயிருத்தல் வேண்டும். தாரதலப் பத்திரங்களோடு காகிதமூலமாய்க் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுக.

"தமிழன்"
(Mis. 19 23 & 31.) C/o இந்துசாதனம்.

## தந்த வைத்திய விளம்பரம்.

டக்டர் J. S. R. குணவர்த்தன
(கொழும்புத் தந்த வைத்தியன்)

இவ்வைத்தியர் இந்த ஆகஸ்ட் மாதம் 1-ம், 2-ம், 3-ம், 4-ம, 5-ம், 6-ம், தேதிகளில் யாழ்ப்பாணம் முற்றவெளித் தெருவிலிருக்கும் பாடிவீட்டில் வந்து நோயாளரைப் பார்ப்பார்.

(Mir. 8 21 & 31)

## ஸம்ஸ்கிருத வித்தியாசாலை விளம்பரம்.

"ஸ்ரீ கமலாம்பிகாஸமேத ஸ்ரீ கயிலாசநாதஸ்வாமி தேவஸ்தான, வேத, ஆகம ஜோதிஷ,காவ்ய,புராண,வித்தியாசாலை"என்னும்,நாமதேயமுடைய வித்தியாசாலை யொன்று மேற்படி தேவஸ்தானத்தில் ஸ்தாபிக்கப்பட்டு நிகழும் பிரமோதூதஸு ஆடிமீ க-ந் திகதி தொடக்கம் நடைபெற்று வருகின்றது. இலவசமாக அன்ன வஸ்திரம் பெற்றுக்கொண்டு சேர விரும்புவோர் இந்த மாதம் ௩௦-ந் திகதி வரையிலும் எனையோர் பின்னும் விண்ணப்பப் பத்திரம் அனுப்பலாம். அச்சிட்ட விண்ணப்பப் பத்திரங்கள் மேற்படி வித்தியாசாலை ஸ்தாபகர் ப்ரம்மஸ்ரீ ந. வே. கார்த்திகேயக்குருக்கள் (தம்பையாக்குருக்கள்) அவர்களிடம் எழுத்துமூலமாய் அல்லது அவருடைய காரியாலயத்தில் முகாமுகமாய்ப் பெறற்பாலன.

☞ தெரிவுசெய்யப்பட்ட முதல் 12 மாணவர்களுமே இலவசப் போஷணையும் கல்வியும் பெறுவர்.

நல்லூர், 20-7-30.

(M. 1. 21st to 21-8-30)

## ஸ்ரீ ராமநாத சித்த ஆயுர்வேத வைத்தியசாலை வண்ணார்பண்ணை.

ஆயுர்வேதவைத்தியர் T. பூலோகசுந்தரம் L. I. M. (சென்னை.)

[இவரே சொந்தக்காரரும் வைத்தியஞ் செய்வோருமாவர்.]

வட இலங்கையில் இதுபோன்ற ஔஷதசாலை வேறு இல்லையெனலாம். இங்கே ஆயுர்வேதமுறை யூனானிமுறை சித்தவைத்திய முறைகளை அநுசரித்துச் செய்யப்பட்ட மருந்துகள் உண்டு.

நீரரோகமெனப்படும் சயரோகம் நீரிழிவு வாதம் என்னுமிவைகளை நிச்சயமாக மாற்றுவோம்.

அசாத்தியமான மேகரோகங்களை மாற்றுவதில் 13 சந்ததியாக அநுகூலமடைந்த பரம்பரை வைத்தியர்கள்.

மருந்துகள், உண்ணும் விபரத்தோடு அனுப்பப்படும், ஏனைய விபரங்களுக்கு, தெரிவிக்கவும்.

### நோயாளரைப் பார்க்கும் நேரம்.

சுளிபுரம் (பெரியபரிகாரியார்) வீட்டில் காலை 8 மணிவரை; பின்னேரம் 7 மணிக்குமேல்.

வட்டுக்கோட்டை: பின்னேரம் 4 மணிதொடக்கம் 6 மணிவரை.

வண்ணார்பண்ணை: காலை 10 மணி தொடக்கம் 1 மணி வரை.

மூளாய்: வெள்ளிக்கிழமையில் 2 மணிதொடக்கம் 4 மணி வரை.

(Y. 77. 30-6-31 வி)

முழு வயிரக் கல்லான சுகாதார முறைகட்கு இவ் 'வியித்றேசன்" காசுக் கற்களின் பகட்டான ஆங்கில சுகாதார முறைகள் நம்மவர்க்குச் சற்றும் ஒத்துவழையாதென்னுந் தீர்மானத்தினால் சந்தோஷமாய்ப் போய்வாருங்களென்று சொன்னபோதிலும் தன்னிஷ்டமாய் வேலை செய்து இலேசாய்ப் பணத்தைச் சம்பாதிக்கத் தக்க வேறிடம் இதைவிட வாயாதென்னுங் குறிப்பினாலோ? அன்றி இச்சுகாதாரத்தைக் கொடுத்து இனிமேல் திரிகோணமலைப் பட்டணத்திலுள்ள சனங்கள் மரணவஸ்தையால் மயங்காது தடுத்துவிடும் டனமை ஞானத்தினால்தானோ? மறந்ததனாலோ இதைவிட்டுப் பெலத்த ஞாயங்கள் பேசி நிலைப்படுத்த உத்தேசிக்கும் ஒன்றுமில்லாதார்க்கு உறுதி பயக்கும்பொருட்டே தேசாபிமானப் பிரபுக்கள் திரண்டு இச்சுகாதார சமுதாய சங்கத்தை யிவ்வூரில் நின்று நீக்கிவிட வேண்டுமென முற்கூறிய தேசாபிமானப் பிரபுக்கள் எண்மராலும் இருகூறியவற்றிலும் பன்மடங்கு அதிகமான சொற்பொழிவுகளும் நிகழ்த்தப்பட்டு இப்பால் இச்சபையில் கூடியிருந்த சனத்தொகையில் 289 கையொப்ப நேயர்களின் உறுதியோடும் இச்சுகாதார சமுதாய சங்கம் நமது திரிகோணமலைப்பட்டணத்துக்கு வேண்டுவதில்லையெனச் சனங்களின் அங்கீகரிப்புடன் நிச்சயிக்கப்பட்டதும அக்கிராசனரின் வேண்டுகோட்படியோ கடவுள்வாழ்த்துக் கூறப்பட்டுஞ் சங்கஞ் சமாப்தியாயிற்று

"தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்
றெல்லாம், அவஞ்செய்வாராசையுட்பட்டு"

திருக்கோணமலை 23-7-1930.
தங்களன்புள்ள சுதேசி.

"இந்துசாதனமும் கந்தபுராணமும்"
3-ம் பக்கத் தொடர்ச்சி.

பூமி தட்டையென்று கூறும் அண்டகோசப் படலக் கண்டத்தை இவர் காட்டுவாரா? அண்டகோசப் படலத்தை தம்மாசிரியருரையிற்றீட்டிவிட்டும் இன்று இரண்டுவாரங்களுக்கு மேலாகின்றனவே. எழுதிய பின்பாயினும் நாம் எழுதியது சரிதானவெனக் குறித்த படலத்தைப் பார்த்தனரா? அன்றிப் பார்த்துவிட்டுத் தம கூற்றுக்காதாரங் காணுது மயங்குகின்றனரா? அல்லது கந்தபுராணமென்று இவர்மாட்டேனதா? இவ்விதமான கேள்விகளே எம்மனத்தெழுகின்றன. ஆசிரியர் இனியாகிலும் கந்தபுராணத்திலேயுள்ள அண்டகோசப் படலத்தை வாசித்து அறிந்தார்மாட்டுப் பொருள் கேட்டுணர்வாராக. இது நிற்க அண்டகோசப்படலம் என்பது அண்ட—கோசம்—படலம் என மூன்று சொற்களைக் கொண்ட ஓர் தொடர். இவற்றில் அண்டம் என்பது, முட்டை வடிவமைந்த பொருள்கட்கு வழங்கும் பதம்; கோசம் என்பது, அநேக பொருள்களைக் கொண்டதாயிருப்பினும் "எறபுழிக்கோடல்" எனனும் உத்தியை யநுசரித்து கருவூலம் அல்லது சொற்பொருள் அறிவிக்கும் புத்தகம் என்னும் இரு கருத்துக்களில் எதையும் கொண்டு முட்டின்றி விளங்கவமையும் பதமாம்; படலமென்பது இலக்கியச் செய்யுட் கூறுபாட்டை யுணர்த்தும் பதமாம். ஆகவே அண்டகோசப்படலமென்பது முட்டை வடிவினதாகிய பொருளைப்பற்றி அறிவிக்கும் புத்தகமமைந்த இலக்கியக் கூறுபாடு என்று, அல்லது முட்டைவடிவினதாகிய பொருள்களை அடக்கியுள்ள ஓர் கருவூலத்தைப் பற்றி விளக்கும் இலக்கியச் செய்யுட் கூறுபாடு என விரியும். இஃதெப்படியாயினும் அண்டகோசப் படலம் முட்டைவடிவினதாகிய பொருள்களைப் பற்றிக் கூறுவதற்கெழுந்ததன்றி, தட்டை வடிவினதாகிய பொருள்களைக் கூறப் புறப்பட்டதல்லவென்பதை சாஸ்திரம் படிக்கும் சிறுவருமறிவர்.

எமது பாலினியாசிரியர், சிவாசாரியர் மீது ஏற்றுங் குற்றங்களுள் பூமி தட்டையென்று சொன்னார் என்பதும் ஒன்றாகும். அப்படி எவ்விடத்தும் அவர் சொல்லியிருக்கவில்லையே! இரண்டாவதாக அண்டவடிவைக் கூறப்புறப்பட்ட சிவாசாரியர் தட்டையைப்பற்றி அக்கூற்றுள் புகுத்திவிடுவாரா? மூன்றாவதாக அண்டகோசப்படலம் கச்சியப்பரின் சொந்தக் கூற்றல்லவே. முதநூலாகிய சங்கரசம்ஹிதையினின்றுமன்றோ மொழிபெயர்த்து இதைத் தந்தனர்.

இவைகளிலொன்றையேனு முணராது எமது பாலினியின் போசிரியர் பூமி தட்டையென்று கச்சியப்பர் சொன்னாரென ஓர் அபாண்டமான மூட்டையைச் சிவாசாரியர்மீது ஏற்றத் துணிந்த அஞ்சாமையையே அஞ்சுகின்றோம்

இனி, பாலினி யாசிரியர் நாம்திருவவதாரஞ்செய்த காலத்தையும் இடத்தையும் மாத்திரமே காலவெல்லையென்றும், இடப்பரப்பு முற்றுமென்றும் ரூபன்மதியோர் இவரின் திருவவதாரத்திற்குச் சற்று முன்பாகவே முடிந்திருக்கவேண்டுமென்றும் எண்ணுகின்றார்போற்றோன்றுகின்றது.

"வேதமொடு தந்திரமு மவற்றின் சார்பு
மிருதிகளும் பிறநூலும் வேறு வேறு
சாதிமெண் டத்தியற்கை மலைகோ வென்று
முண்மை தெரிந்திடிறபடைப்புமுலப்பில்பேத
முதலின வவ்வவற்றின் றிரிபுகாடி
யிர்தவுனக் கிண்டுண்மை யதவே சொற்று
நமிலிவ வண்டத்திற் புவன நூற்றெட்
டமையருள்சேருருத்திரர்தம்மிருக்கையாமே"

என்று கூறுவது பாடல் அப்படலத்திற் காணக்கிடக்கின்றது பாலினி யாசிரியர் இதற்குப்பொருள் எப்படிக்கூறுவாரோ? தமதபேருரையோடிதையெங்ஙனம் இசைவிப்பாரோ? யாமறியோம். இராமுப் பின்னை அறிவாரோ? அதையுமறியோம்.

இன்னும், அண்டகோசப் படலத்திற் காட்டியுள்ள அளவைகளைக் கண்டும் பாலினியாசிரியர் அவ்வளவைகளெல்லம் இப்போது காணப்படும் சிருட்டியின் விஸ்தீரண அளவைக்கு அமைந்துள்ளனவென மதிக்கின்றார்? மூன்றாந்தரம் வாசிக்கும் சிறுவனும் இதை விளக்கிவிரிப்பனே.

இனி, பாலினிச் சக்கிதானம் இப்போது மேனாத் தேசத்தவராற் கண்டுபிடிக்கப்பட்டு பூமிசாஸ்திரங்களிலெல்லாம் காணப்படும், சாதாரண விஷயங்களான, சூரியன் சஞ்சரிக்குந் தூரம், சந்திர தூரம், கிரகதூரங்கள் முதலியவற்றை ஏதோ தாம் பெரும் பிரயாசை யெடுத்துக் கண்டு பிடித்தாற்போல லட்சக் கணக்கிலும் கோடிக் கணக்கிலும் மைல்களைக் காட்டி கீட்டுகிறார். சீட்டினது மன்றி இவைகளையெல்லாம் "எச்சமயத்திலுள்ள வானசாஸ்திரிகளுமொப்புக் கொள்வர்" எனக் கூக்குரலிடுகின்றனர். யார் அப்படியல்லவென்றது. பாலினியார் எடுத்துக்கொண்டது சிவாசாரியார் சோதிட விரோதமாகப் பாடியுள்ளாரென்பதேயாம் சிவசாரியார் முதநூலிலிருந்து மொழிபெயர்த்தாராதலினாலும் முதநூல் சொன்னோர் சுக்கிராச்சாரியருடைய கூற்றைச் சொன்னாராதலினாலும், சிவாசாரியரல்ல சுக்கிராச்சாரியரே பாலினியாரின் அண்டத்தைக் கண்டுபிடிக்க முடியாது திண்டாடினாரென்பதொருதலை இன்னும் சிருட்டிபேதங்கள் உலப்பிலவாகையால் புராணத்திற் கூறப்பட்ட சிருட்டிக் காலத்தில் பாலினி சசிரியர் எந்த அண்டத்துளிருந்தாரோ? இதையாரறிவர்!

ஆகவே, கச்சியப்ப சிவாசாரியார், ஐயோ பாவம் ஏழைப்பிராமணன், கிரபராதியாகி விடுகின்றார்.

இது இம்மட்டில் நிற்க, 27-7-30ல் வெளிவேறிய சோதிடபரிபாலினியில் முதற் பக்கத்திற் றலைப்பகுதியில் "கந்தபுராணப் பொருளாராய்ச்சி" என்ற தலையங்கத்துடனும் "குகதாசர் தாசன்" என்னும் கைச்சாத்துடனும் ஓர் இராவண சந்நியாசி தோற்றி, பசுத்தோல் போர்த்தபுலிபோல் பாலினியாசிரியருக்கு முண்டு கொடுக்கிறார். சாடிக்கு மூடியாய்த்தவாறு இப்போலித் தாசர் காரணமின்றி ஐயர் சொன்ன அண்டகோசப் படலத்தையும் புரட்டி அகடிதகடிஞசாமர்த்திய முறையில் ஓர் உரை கழற்றியிருக்கிறார். ஈண்டு அநுவதிக்கின்றோம். அறிவுடையீர் கண்டானந்தங் கொண்மின்.

"அக்காலத்தில் பூகோள ககோளகணித தருக்க சாத்திரங்களைக் கற்போர் மிக அரியராதலினாலும், சாமானிய சனங்கள் பூமி தட்டைபோற் றோற்றலிற் றட்டை வடிவினதேயென்றும், சந்திரனும் சூரியனைப் போலச் சுய ஒளியுடைய கதிரென்றும், அது சூரியனிலும் பார்க்க தூரத்திலிருப்பதாற்றான் குளிர்ந்த கிரணங்களுடையதாயிருக்கின்றதென்றும், இராகு கேதுகள் பாம்புகளென்றும், எண்ணியிருந்தமையாலும், இவ்வாறே மந்தமதிகள் ஆராய்ச்சியற்ற தம்மறிவுக்கெட்டியவாறு கொண்டுள்ள கொள்கைகளைப் பிழையென்று காட்டிக் கண்டித்தற்கு ககோள பூகோள சாத்திர நுட்பங்களை நன்கு விளக்கவேண்டியிருத்தலின் அவ்விளக்கங்களால் நூல் அநுவசியமாக விரியும் என்றஞ்சியதாலும், அவர்களின்விளக்கத்துக்கமைந்தவாறே ஸ்ரீ கச்சியப்பசிவாசாரியரும் அண்டகோசப்படலத்தை இயற்றியுள்ளார். ஆதலின் அவர்பாலிழுக்கின்றெனவறிக."
என்பதாம்.

இனி இத்தாசர் முதற்பக்கத்தில் மூன்றே முக்காற் பத்திகளில் வசனங்களை நிரப்பியுள்ளார். இதிலே ஒன்றரைப் பத்தி ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் பெருமானின் "சுப்பிரபோதம்" என்பதின் அநுவாதம், அரைப்பத்தி மேற்படி அநுவாதத்தின் 'வியாக்கியானம்' அடுத்தமுக்காற்பத்திஉதாரணங்கள், அதன்பின்னாம் அநுவதித்திருக்கும் சொற்பிரயோகம் மிகுதி சாதனவாசிரியரின் உலகம் பலவிதமென்னும் விஷயத்திற்கும் ஆசிரியருக்கும் நிந்தை.

இந்த ஆராய்ச்சியார் வந்திருக்கும் போது இவருக்கு என்ன குறை. இவரும் இவரும் ஆராய்வது ஓரே அக்ரகாரத்துளானமையால் ஒருபோது ஒருவரையொருவர் ஆராய்கின்றனரோ? யாமறியேம் எமதாண்மையாளராகும் செந்தியபெருமான் திருநாமங்களில் ஒன்றைத் தாங்கிநின்று அபிமன்னுவைக் கொன்றமாலையால் வளைத்துவைத்து யுத்தம்பண்ணியவாறு இத்தாசர் தாம் எடுத்துக்கொண்ட நாமவிசேடத்துள் மறைந்துநின்று புன்மொழி புகல்கின்றார் அவ்வாறு புகலாது அக்நாமத்திற் கேற்கவாயினும் நடந்துகொள்ளாதிருக்கின்றனரேயென்பதெம் மனதைப் புண்ணுக்கிவிட்டது. குகப்பெருமான திருவருள் மலிக.

இனி, பாலினி யாசிரியர் 13-7-30-ல் பிரசுரித்த "கந்த புராணமும் இந்துசாதனமும்" என்ற வியாசத்தின் விஷயபாகத்தைக் கண்டங்கண்டமாக ஆராய்ந்து எமது அறிவு ஆற்றலுக்கேற்ப அபிப்பிராயங் கூறினோம் கற்றறிந்த மேலோர் இன்னும் நுணுகி அபிப்பிராயங் கூறுவர் என்றே மதிக்கின்றோம்.

இனி, பாலினியாசிரியர் தம் எடுத்துக்காட்டுகளை ஆதாரமாகக்கொண்டு கண்ட முடிவுரையைப்பற்றிக் கூறுவதற்கென்னவிருக்கின்றது அஸ்திவாரம் இல்லையேயாக கட்டிடம் இல்லையே. இல்பொருளைப்பற்றி அபிப்பிராயங் கூறல் தன்னிழலுடன் சமர்செய்யும் விசர்ச்செய்கையாகும். இனி, 27-7-30-ல் "கந்தபுராணமும் இந்துசாதனப் பத்திராசிரியரும்" என்ற 4பத்திநிறைந்த ஆசிரியருரையில், நாம் முன்கூறியவற்றிற்கு முரணான மேற்கோள்களைக் கழறி, பின்பு கந்தபுராணம் அகப்பொருள் நூலுமல்லப் புறப்பொருள் நூலுமல்லவென உளறி, பின் சுருப்பதானத்தைப்பற்றிச் சாதனவாசிரியர் கிகழ்ந்தவாசகங்களுக்கு "இதுவன்றோ வறிவின்மேன்மை"யென்றருளறி, பின் சபாபதி நாவலரவர்களின் கூற்றொன்றைக் கிளறி வேறும் ஏதேதோ அளறி ஈற்றில் நாம் "அகத்தையும் புறத்தையும் வெழுக்கப்பண்ணிவிடுவோம்" என்றதற்கு இது எம் தொழிலாகும் என்று சுழலுகின்றார். ஆம், அதுவே எமது தொழில். 'அநுபவத்தாலறிக'வென்றே கூறுவோம்.

செந்துரையன் திருவடி வாழ்க.

ஊழ் வலிது.

"எழுதியவா றேகா ணிரங்குமட நெஞ்சே
கருதியவா றமோ கருமங்—கருதிப்போய்க்
கற்பகத்தைச்சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்கா
முய்பவத்திற் செய்த வினை." [மூதுரை]

"முதிர்தரு தவமுடை முனிவராயினும்
பொதுவறு திருவொடு பொலிவராயினு
மதியினராயினும் வலியராயினும்
விதியினையாவரே வெல்லு நீர்மையார்."

என்பதாதி பிரமாணங்களால் 'விதி' யென்பது முற்சனனத்திற் செய்த, பாப புண்ணிய கன்மங்களுக்குத் தக்கபடி "இவ்விதமாக அனுபவிக்க வேண்டும்" என்று கடவுளால் விதிக்கப்பட்டது. 'மதி' யென்பது எங்களுடைய அறிவு; புத்தி யென்று சொல்லலாம். நாம் முற் பிறப்பிற் செய்த கன்மங்களுக்குத் தக்க பிரயோசனத்தை யனுபவிக்கவே இச்சென்மத்தில் நமக்குப் புத்தியும் ஏற்படுகிறது. இதையறிந்த பெரியோர்கள் 'விதி யெவ்வழி மதியவ்வழி' என்றும், 'புத்தி கன்மாநுசாரணி' என்றும் கூறுகின்றார்கள்.

பிராப்தம் என்பது கன்மத்தின் பலன். ஞானம் கன்மத்தால் வருவதல்ல. இச்சையோடு செய்யும் ஆகாமிய கன்மங்களே சஞ்சிதமாகின்றன. சென்ற சென்மத்தில் செய்த சஞ்சிதமாகிய மூட்டையை இப்போது பிராரப்தமென்ற பெயரால் அனுபவிக்கிறோம். பிராரப்த பலன் நமது முயற்சி யில்லாமல் தானே வரும். தடுத்தாலும் போகாது விருப்பத்தோடோ விருப்பின்றியோ அதை அனுபவித்தேதீரவேண்டும். இதுபற்றியன்றே பொய்யாமொழிப்புலவரும்

"ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று
சூழினுந் தான் முந்துறும்."

என்றார் அஃதாவது வினை விளைவுகளை விலக்குதற்கு வேண்டிய உபாயங்களைச் செய்யினும் ஊழானது அவையனைத்தையுங் கடந்து வந்து தன் பயனைத் தப்பாது கொடுத்து விடுமென் பது இதனால் அறியக்கிடக்கின்றது. இதற்கோர் திருஷ்டாந்தம்:—

விருத்தச் சந்திரன் என்பவன் சிந்து தேசத்தரசன். சயித்திரதனுடைய பிதா. தன் மகன் இன்னநாளில் இறப்பானென்று கனவினாலும் அசரீரியாலும் முன்னரே அறிந்திருந்தான். அது நிகழ்வண்ணம் விரைந்து சூழ்ந்து சமந்த பஞ்சக மென்னும் தனியிடத்தை யடைந்து தெற்கு முகமாகயிருந்து யமனை நினைத்து "என் மகனுடைய தலையை எவன் பூமியில் வீழ்த்துகின்றனோ அவனது தலை உடனே வெடிக்கக் கடவது" என்று மனதில் நினைத்து உரிய மந்திரங்களைச் செபஞ் செய்துகொண்டிருந்தான், இப்படியிருந்தகாலத்திலே அத்தின புரியில் நடந்த பாரதப் போரில் பதினான்கா நாள் மாலையில் சயத்திரதனுடைய தலை அருச்சுனனுடைய பாணத்தால் வெட்டுப்பட்டது. அப்பொழுது அவ்வரசன் சூழ்ந்திருக்கும் உண்மையைக் கிருஷ்ணர் தெரிவித்தார். தெரிந்த அருச்சுனன் அந்தத் தலை கீழே விழாதபடி பாணத்தை ஏவிக் கண் மூடி மந்திர செபஞ் செய்கின்ற பிதாவினுடைய கையில் விழும்படி செய்தான் பாவம்! கண் விழித்துப் பாராமல் யாதே! என்று அதனைஅவன் கீழே யெறிந்தான். அது பூமியில் விழவும் அவன் தலை பொடிபட்டது. ஊழை விலக்குதற்கு முற் சூழ்ந்திருந்தும் அதனினும் அதுமுற்பட்டு நின்றது. அதனால் இருவரும் பட்டார். இச்சரித்திரத்தால் விதிவலிதென்பதையறிந்து கொள்க.

மார்க்கண்டேயர் தமது மரணத்திலிருந்து விடுபட்டதினால் மதியே வலிமையையுடையதென்று' சிலர் கொள்கை. மார்க்கண்டேயரைப் போல், "ஈசன் வேறு, தான் வேறு" என்றெண்ணாமல், "நானே யவன், அவனே நான்" என்ற அனன்விய நிலைமையில் பக்தியைச் செலுத்ததினால் ஒருபோது விதியை மதியை வெல்லும்.

'அழுதாற்பயனென்ன நொந்தாற்பயனென்ன
வாரவதில்லை
தொழுதாற் பயனென்ன நின்னையோருவர்
சுடவுரைத்த
பழுதாற் பயனென்ன நன்மையுந் தீமையும்
பங்கயத்தோ
னெழுதாப்படி வரு மோசலியாதிறொன்
னேழைநெஞ்சே"

எனவே விதிவலிதெனினும் முயற்சியைக் கைவிடாது, ஊக்கத்துடனுழைத்து, நல்ல பிரயோசனங்களை யடையப் பிரயாசைப்பட வேண்டியதே நன்மதி. மதியால் முயன்று விதியையடியோடு தடுக்கமுடியாதெனினும் விதியின் கடுமையைச் சகிப்பதிலுள்ள கஷ்டத்தையேனும் குறைத்துக்கொள்ளலாம்.

ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்
அம்மன்கோயில் சுதுமலை.



வள்ளி இந்து கான சபா.
ரேயல் 'இலக்ட்ரிக்' நாடகசாலையில்
2-8-30 சனிக்கிழமை 2-8-30
சதாராம் சரித்திரம்.
திருடர்கள்- { 1. இராசபார்ட்—W. M. சிதம்பரநாதன் 2. கள்ளபார்ட்-A. M. காசிமேக ஆச்சாரி
இருவருக்கும் பந்தயப் போட்டா போட்டி.
இம்முறையன்றி பின்னொருமுறை கடைக்கப்படமாட்டாது. E. S.
(Mis. 24. 31)


வித்தியா விநோத விவேகம்.
——o——
[வண்ணை: வை. இ.]

ஹாஸ்யம்.

திருடன்:—அவருடைய மாட்டை நான் திருடவில்லை; வேடிக்கைக்காக அதை என் வீட்டில் கொண்டுபோய்க் கட்டிக்கொண்டேன்.

நீதிபதி:—வேடிக்கையையே அளவுகடந்து செய்ததனால் நானும் உனக்கு வேடிக்கையாக ஒருமாத சிறைத்தண்டனை விதிக்கிறேன்.

நாயைச் சிங்கமாகக் காண்பவன்.
32 வயதில் மூன்றடி உயரம்

இங்கிலாந்தைச்சேர்ந்த க்ரோபரோவில் ஸ்ரீ ஜாக் ரஸ்வெல் லாம்பர்ட் என்னும் ஒருவர் இருக்கிறார். அவருக்கு இப்போது 33 வயதாகிறது. அவரும் இங்லாசரும் ஒரே வயதினர். அவர் 2 அடி 10 அங்குல உயரந்தான் இருக்கிறார். ஆங்கிலேயர்களில் மிகக் குள்ளமானவர் அவரே. அவர் மகா யுத்தத்தின்போது சேனையில் சேர முயன்றாராம். அப்போது அவர் தனக்கு எப்படிப்பட்டபயமுமில்லை என்றும், ஆனால் நாயைக் கண்டால்மட்டும் தனக்கு அச்சம் அதிகரிப்பதாகவும், அவை சிங்கங்களைப் போல் அவ்வளவு பெரிதாகத் தோன்றுவதாகவும் கூறினாராம்.

மிகப்பெரிய புஸ்தகம்.

இங்கிலாந்தில் உள்ள பெரிய புஸ்தகம ஷேக்ஸ்பியர் மெமோரியல் தியேட்டரில் இருக்கின்றது. அது இருநூறு அந்தர் நிறையுள்ளதாக இருப்பதுடன் அதை நகர்த்துவதற்கும் நான்கு ஆட்கள் தேவைப்படுகின்றது.

24-7-30ல் தெல்லிப்பழை வை. ச. முருகேச வைத்தியர் வினவிய வினாக்களின் விடைகள் தவறிவிட்டன. வைத்தியர் அவற்றை எழுதியனுப்புவாராக. (வை. இ.)

குறிப்பு: இடமின்மையால், 'விடையனுப்பினோர் பெயர்முதலானவைகள் விடப்பட்டன. அடுத்த வியாழக்கிழமை அவைகள் யாவும் பிரசுரம்பெறும். (வை. இ.)

வினாக்கள்.

இ. சிவசம்பு
V. S. L. C. மாணவன்
சரவணபவானந்த வித்தியாசாலை
கோப்பாய்.

ஓர் பழமொழிச் சாரமாய்ப் பொருள் கூறுக.
வெண்பா.

1 காலாற்சுசிக்கேநிற் கைவிட்டுக்கண்பிதங்கித்
தோலேறுவாயான்றுடி துடிப்ப-நாலாறு
கன்னற்சிதகமாய்க்கஷ்டப்படினுங்கோ
தன்னிற்றுணன்டேதனம்.

குறையாளாறுய் விளக்குக.

2 பூமி முகினீர் பொருந்தண்ட மாதித்தன்
[illegible]கடறெய்வத்தோக்குபசு-நாமொற்று
சேரும் பயன்போர்த் திரியக் காசவொற்
கூருகவாம்லப் பெயரான் கூறு.

வேறு.

3 முன்னூல்விளக்காமுதலென்மனையிடத்துப்
பின்னூல்விளக்கவரும்பெற்றியாக்-தன்வடிவு
போக்கிப்பிறர்க்குகைபொங்கச்செயும் பொருளாக்கின் பொருளுடனே சொல். -வோத

4 அம்மானக்கையிலனியாக்குரங்கியுளை
யிம்மானிடனத்தியென்மாலே-நம்மூதார்
அக்காளையேறியமேலையத்தான்வாயிற்
கொக்காரச்சென்றன்பொருளைக்கூறு.

## ஜவாஷிருல் முபர்ரா லேகியம்.

ஒரேவேளையில் பரீட்சை பார்க்கலாம்.

பலமில்லாமல் தளர்ந்து சோர்வடைந்த நரம்புகளையும் உலக வாழ்க்கையில் பிரியமில்லாமல் சஞ்சலப்படும் மனதையும் ஒரே வேளை லேகியம் சாப்பிட்ட பிறகு ஆச்சரியப்படும்படி நரம்புகளுக்குப் பலமும் திமிரும் உண்டாகும்.

பரீட்சைக்கும்பலனுக்கும் உத்தரவாதமுள்ள சத்திய அவுஷதம். சொர்ப்பன ஸ்கலிதம், தரித ஸ்கலிதம், பற்பல வாய்வு ரோகங்கள், இடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல்படிமர்தம் தேக காங்கையில் நீற்றுப்போகும் பலஹீனங்கள் முதலிய யாவற்றையும் குணப்படுத்தும் பத்தியமில்லை. உபயோக விபரம் மருந்துடன் வரும். வி. பி. வேறு.

20நாள் 40வேளை டப்பி 1க்கு விலை ரூ 4-00
10நாள் 20வேளை டப்பி 1க்கு விலை ரூ 2-20

மேலே சொல்லப்பட்ட வியாதிகளையும் இதில் சொல்லப்படாத வியாதிகளையும் கண்டிக்கும், அசல் சத்தியவாக்குள்ள (பிட்டுக்குருவி) மாத்திரைகள் 16கொண்ட டப்பி1க்கு விலை ரூபா 5-00. கைகண்ட பலன்.

வி. பி. வேறு.

K. V. Vappadurai & Co
Portonovo
S. I.

(M. 78 8—4-8-30)

## யாழ்ப்பாணத்து வைத்திய நூல் வெளியீடு.

| | ரூ. ச. |
|---|---|
| பராசசேகர முதற்பாகம் சிரரோக நிதானம் | 3-50 |
| ஷை இரண்டாம் பாகம் சேர்ப்பரோக நிதானம் பாலரோக நிதானம் | 2-75 |
| வைத்திய விளக்கம் பதார்த்த சூடாமணி | 2-00 |
| வைத்தியக் களஞ்சியம் (ஓர் மாத வெளியீடு) வருடசந்தா | 4-00 |

இவை எம்மிடத்தும் யாழ்ப்பாணத்துள்ள பிரபல புத்தக சாலைகளிலும் பெறற்பாலன.

ஏழாலை: ஐ. பொன்னையா
வைத்தியர்.
சுன்னாகம், யாழ்ப்பாணம்.

(Q 13. வி. 29-5 to 28-8-30)

## அறைக்கீரை விதைத் தைலம்.

Regrd 1901 — Years OLD

KUMBAKONAM
V. SWAMI IVENGARS
RENOWNED
ARIKEERAI VERAI THAILUM.
MANUFACTURER JEMBAGATHAMMAL.

பித்த மேகரோனது சிரசுக்கேறி அதனால் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண் புகைச்சல், கண்ணிலிருந்து நீர் வடிதல், ஒருதலைவலி இருதலைவலி, பீனிஸம், காதிரைல், சீழ்வடிதல், காது இரைச்சல் காதுவலி, ஜர்தாவருஷத்திற்குட்பட்டதாயும் இரைச்சலோடுக் கூடிய காதடைப்பு, கரப்பன், தேமல், சிரசில் மயிருதிர்தல், சொண்டுவிழுதல், முதலான ரோகங்களை வேர்த்திப்பதுமன்றி மயிரை நன்றாய் வளரச்செய்யும். இந்த ரோகவில் காணப்படாத கழுத்துக்குமேற்பட்ட சகல வியாதிகளையும் அநுகூலப்படுத்தும். மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தைலம் தேய்த்து ஸ்நானம் பண்ணினால், தேகத்திற்குக்குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையுங் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீர் சீயாக்காயுடன் ஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போசனஞ்செய்துகொள்ளவேண்டும். 8-நாள் வரையிலும் சுகந்தம் மாறாது அன்று பகலில் மாத்திரம் தூங்கக் கூடாது.

புட்டி 1-க்குக் கிரயம் ரூபா 1—10—0
" 3 " " " 4—08—0
" 6 " " " 9—0 —0
" 12 " " " 18—0 —0


வி. பி. சார்ஜ் பிரத்தியோகம்

(விலாசம்.) V. S. ஜெம்பகத்தம்மாள்.
மைலாப்பூர், சென்னை.
No Marichetti, Street,
Mylapore

(Q 11. வி. 5-5 to 8-8 30.)

## ஒவ்ரின்! ஒவ்ரின்!! ஒவ்ரின்!!!

மிகவிலைகுறைந்தது! நீடித்து உழைக்கக்கூடியது.



### மோட்டர்ரதங்கள் விற்பனை.

ஒவ்ரின், டொட்ஜ், டிசொற்ரே, முதலிய இரதங்கள்; வார்கோ, டொட்ஜ், மொறிஸ் முதலிய பஸ்களும், லொறிகளும்;

டக்லாஸ், ஏ. ஜே. எஸ். சாரேலீயா மோட்டர்சைக்கிள்களும், சாதாரண சைக்கிள்களும் எம்மிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பாவித்த மோட்டர்ரதங்கள் மாற்றிக் கொடுக்கப்படும். எவ்வித மோட்டார்சாமான்களும் கிடைக்கும்.

கந்தோர்கள்,
(1) இரத்தினபுரி.
(2) 11 அவொன்டேல்தெரு, கொழும்பு.
(3) கொட்டடி, யாழ்ப்பாணம்

K. S. இராஜலிங்கம்,
மெசர்ஸ் வாக்கர் சன்ஸ் கம்பெனியின் ஏசன்ட்,
இரத்தினபுரி.

(Y 1. 14 7-30—13 7-31)

## கியாத நாத மணிகள்.



தேவாலயங்களிலும், வித்தியாலயங்களிலும் உபயோகப்படத்தக்க, காதுக்கினிய ஓசையோடு கூடிய 'கியாத நாத மணிகள்' சிறுமணி தொடக்கம் மிகப்பெரியமணி வரையில் எங்களிடத்தில் எந்த நேரமும் பெறத்தக்கன. இன்னும் விரும்பியவர்கள் தங்களுக்கு வேண்டிய மணியின் பிரமாணத்தையும் நிறையையுந் தெரிவித்தால், ஒருகுறித்த தவணைக்குள் தவறுமற் செய்துகொடுக்க ஆயத்தமாயிருக்கின்றேம். எங்கள் தொழிற்சாலையில் ஆக்கப்பட்ட மணிகளே யாழ்ப்பாணத்திற் பல இடங்களிலும் இலங்கையின் ஏனைய பாகங்களிலும் அதிகமாக உபயோகிக்கப்படுகின்றன.

S A தம்பிப்பிள்ளை & சன்ஸ்,
நல்லூர்

(Y. 71. வி. 5-2-31)



தங்க மெடல்கள் பெற்ற
ஐரோப்பிய மதுரைக் கம்பனியாரால்
செய்யப்படும்
திறமான குடை அடையாளமுள்ள

## கொழுக்கி ஓடுகள்.

மதுரைக் கம்பனியார் சிறந்த குடை அடையாளமிட்டு இந்த ஓடுகளை வெகு பணிக்கராய் அமைத்திருக்கிறார்கள். வெயில், மழை, நெருப்புக்கு இதிலும் மேலான பாதுகாப்பு உபகரணம் வேறொன்றில்லை. பல தொழில் நிபுணரின் பரிசோதனையால் இதன் இயற்கை மெச்சப்பட்டது. இதுவரை 10 தங்க மெடல் பரிசுக்குக் கம்பனியாரைத் தகுதியுடையாராக்கிப் புகழ்பெற்றது. மிக இலேசானது. மலிவானது. ஒவ்வொரு ஓட்டிலும் குடை அடையாளம் விளங்கும். காங்கேசன்துறையிலே கவமாகக் கட்டப்படும் அரசினரின் சுகஸ்தான கட்டடங்களுக்கென இக்குடை அடையாளமுள்ள 55,000 ஓடுகள் பாவிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த இனத்திலே கண்ணாடி ஓடுகளுமுண்டு.

ஜே. செருபிம் அன்ட் பிறதர்
ஏசண்டர், பெரியதெரு, யாழ்ப்பாணம்.

(Y 70. 11-8 30.)

## இந்தியாவின் மிகப் பெரிய ஓறியன்றல் சிவவீமாக்கம்பனியின்

### 19-ம் மூன்று வருட லாபப்பங்கீடு

1930-ம்ஆ டிசம்பர்மீ 31-ந் திகதியில்
காணப்படும் லாபத்தின்படி நடத்தப்படும்.

இதற்குமுந்திய மூன்று கணக்குத்திட்டங்களில் கண்ட லாப ஏறுபடி.

1921-ம்ஆ 21½ லட்சம், 1924-ம்ஆ 53 1/3 லட்சம்,
1927-ம்ஆ 78 லட்சம் ரூபாக்களாகும்.

வீமாக்காரருக்குக் கொடுப்பதாக நியமிக்கப்பட்ட இறுந்தொகைகள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1921-ம்ஆ | வருஷமொன்றுக்கு | ரூபா | 1000-க்கு | ரூபா | 10; |
| 1924-ம்ஆ | ,, | ,, | 1000-க்கு | ,, | 22½; |
| 1927-ம்ஆ | ,, | ,, | 1000-க்கு | ,, | 25. |

இந்தவருடத்தில் லாபத்துடன் வீமாத் திருகிறவர்கள்
1930-ம்ஆ டிசம்பர்மீ 31உ வரைக்கும் கட்டிவந்தால்
இம்முறை லாபத்திற் பங்குபெறுவார்கள்.

இப்பொழுதே வீமாவிற் சேர்ந்தால் உமக்கு லாபமுண்டு.

பிரதிநிதிகள் எங்குமுண்டு.

தலைமை வேலைத்தலம்:—ஓறியன்றல் கட்டடங்கள், பம்பாய்.

விபரங்களுக்குக் கீழ்க்குறிக்கப்பட்ட ஒருவருக்கு எழுதியறிக.

A. C. லோட்டன், கிளைக்காரியதரிசி, 52 பெயிலித்தெரு, கொழும்பு.

J. P. கனகசபை, பிரதானபிரதிநிதி, கண்டி.

பிரதிநிதிகள்.
- வில்லியம் மாதர் & சன்ஸ், யாழ்ப்பாணம்.
- T சுப்பிரமணியம், கந்தரோடை, சுன்னாகம்.
- M. குமாரசூரியர், சுளிபுரம்.
- S. இரத்தினசிங்கம், மட்டக்களப்பு.

(Y 78. 30-6-30—29-7-31. வி & ஜ.)

## "நயனசஞ்சீவித்தைலம்."

1வது இத்தைலம் கண்ணொளி, குளிர்ச்சி, மயிர் வளர்ச்சி, ஞாபகசக்தி, தேகஆரோக்கியமாகிய இவற்றைக் கொடுக்கும் சுகந்த வாசனையுடையது கண் ரோகம், சிரரோகம், (தலைவலி கபாலம்) முகரோகம, பித்தரோகம், மேகஉஷ்ணம், அகால வெள்ளெழுத்து, மயிருதிர்வு, நரை தேகஎரிவு முதலானவற்றைப்போக்கும் சிறுவர் பாவித்தால் கணைகள அஸ்தி சுரம் முதலியன நீக்கும். தைலம் சிறிது வைத்துக்கொள்ளுபவர்க்குக் குளிர்ந்த நீரில் அல்லது வெந்நீரில் வழக்கம்போல் ஸ்நானஞ் செய்யத்தக்கது அதிகம் தேய்த்தால் சீயாக்காய் பாவிக்கலாம்.

விலை 1போத்தல் ரூபா 10.
" ½போத்தல் ரூபா 2-50
தபால்செலவு பிரத்தியேகம்.

## 'ஏக தந்த சூரணம்.'

திறப்பற்பொடி.

(2-வது) பல்லுக்கொதி, பல்லசைவு, பல்லீறல் வீக்கம், பற்புழுபற்கோறை, இரத்தம் சிழுண்டாதல், பல்லவியல், பழுப்பு, பாசி, புண் டல்பிடிக்குதலாலுண்டாகும்வேதனை, முரசு கரைதல், வாயவியல், வாய்நாற்றம், முரசு வீக்கம், கொடுப்புக்களில் வருங்கட்டிகள், வீக்கம் இவை முதலாம் பல்வியாதிகளைப் போக்கி பற்களுக்கு உறுதியையும் ஒளியையும் ஆரோக்கியத்தையும் கொடுக்கும். அவசியமிருந்தால் ஒருநாளைக்கு 2 அல்லது 3 தடவையும் தேய்க்கலாம்

விலை 1 டின் ரூபா 2 சதம் 50.
" 1 டப்பி சதம் 25
தபாற்செலவு பிரத்தியேகம்.

## அயலேகியம்.

(3-வது) இம்மருந்து இரத்தசுத்திக்குச் சிறந்த ஒரு சஞ்சீவி கரப்பன், கிரந்தி, முதலாம் கெட்டநீர்களாலுண்டாகும் படர்தாமரை, தேமல், சொறி, சிரங்கு, குஷ்டம், வாதரோகம், பித்தரோகம், க்ஷயரோகம், பிரமேகம், நீரிழிவு, குன்மம், பித்தவாயு, மகோதரம், பீலிகம், பாண்டு, விஷநீர், சோகை, காமாலை, வீக்கம், சூலை, கிரகணி, தாதழிவு, நரம்புச்சோர்வு, உற்சாகமின்மை, இரத்தாசயப்பெலகீனம், தேகஎரிவு முதலிய நோய்களை நீக்கவல்லது. எல்லா இந்திரியங்களுக்கும் புஷ்டியையும், ஆயுள்விர்த்தி ஆரோக்கியவிர்த்திசந்தானவிர்த்திகளையுங்கொடுக்கும்.

ஸ்திரீகள் இம்மருந்தை சாப்பிட்டுவந்தால், மாதவிடாய் சம்பந்தமாக வரும் சகலரோகங்களையும் நீக்கி மேற்சொல்லிய நற்குணங்களைத் தரும்.

ஐந்துவயதிற்குமேற்பட்ட சிறுவர்களும் ஏற்ற குறைந்த பிரமாணம் இதிற் சாப்பிட்டுவந்தால் தன்னீர் சப்பந்தமான நோய்களைப்போக்கித் தேகதிடம் பலம் உண்டாகும்.

விலை 40 மருந்து ரூபா 16.
" 20 " ரூபா 8.
தபாற்செலவு பிரத்தியேகம்.

பாவிக்கும்விதம் மருந்துடன்.

விலாசம்:
முத்துக்குமாரு வைத்தியசாலை,
ஊர்காவற்துறை,
Kayts.

ந. சிவசுவாமி ஐயர்,
ஆயுர்வேத வைத்தியர்.

(Q 12 வி. 8 5-30 to 8-8-30.)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by Pandit V. T. Sambhandan for and on behalf of the Proprietors, the Jaffna Siva Paripalana Sabai, at their Press the Saiva Prakasa Press, Vannarponnai.